விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-7730)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 13 திங்கட்கிழமை (30.09.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285

## மதகுடன் மோதுண்டு மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் உயிரிழப்பு ஓமந்தையில் சம்பவம்

(வவுனியா)
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதர் பனிக்கர் மகிளங்குளம் ▶23

### பாதுகாப்பு படையினரையும் பொலிஸாரையும்

## அரசியல்வாதிகள் சுதந்திரமாக செயற்படவிடவில்லை

### – மகேஷ் சேனநாயக்க

(கொழும்பு)
பாதுகாப்புப் படையினரையும் பொலிஸாரையும் சுதந்திரமாக செயற்பட அரசியல்வாதிகள் முட்டுக்கட்டையாக இருந்துள்ளனர் என்றும் அது மாற வேண்டும் எனவும் தேசிய மக்கள் இயக்கத்தின் ஜனாதிபதி வேட்பாளர் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது முடிவை அறிவிக்க நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு நிகழ்ச்சியில் பேசிய அவர், இலங்கைக்கு ஒரு மாற்று சக்தி ▶23

### வெள்ளைவான் கலாசாரத்தையும்

# சர்வாதிகார ஆட்சியையும் மீண்டும் கொண்டு வருவதா?

## மக்களே தீர்மானிக்க வேண்டும் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு) மீண்டும் சர்வாதிகார ஆட்சி, வெள்ளைவான் கலாசாரம், ஜனநாயக உரிமை மீறல் உள்ளிட்ட கட்டமைப்பினைக் கொண்டு வருவதா? இல்லையா? என்பதை நாட்டு மக்கள் தூர நோக்குடன் சிந்தித்து தீர்மானிக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ▶23



### கோத்தா, சஜித்

## பரப்புரைகள் ஆரம்பம்

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலில் மோதவுள்ள சஜித் பிரேமதாஸவும் கோத்தபாய ராஜபக்ஷவும் அடுத்த மாதம் கொழும்பு காலிமுகத்திடலிலும், அநுராதபுரத்திலும் தமது பரப்புரைப் பேரணிகளை ஆரம்பிக்கவுள்ள ▶23

### அடிகாயங்களுடன்

## நெடுந்தீவில் ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
தலையில் பலத்த அடிகாயங்களுடன் நெடுந்தீவு மேற்கு பெரியதுறைக் கடலில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு 04ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 58 வயதுடைய முருகேசு பத்மநாதன் என்பவருடைய சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளது. ▶23

உள்ளே...
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கு புருசோத்தமன் எழுதும் அன்பு மடல்



### நீராவியடிப் பிள்ளையார் விவகாரத்தில்

## விசாரணை நடத்தப்படாவிட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும்

### சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)
நீராவியடி பிள்ளையார் ஆலய விவகாரத்தில் முறையான விசாரணை நடத்தப்படாவிட்டால் சர்வதேச மட்டத்தில் பாரிய விளைவுகள் ஏற்படும் ▶23

## பிணைமுறி மோசடிக்கு சஜித்தும் பொறுப்பு

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)
மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ▶23

### எதிர்கால ஜனாதிபதியை சுதந்திரக் கட்சியே தீர்மானிக்கும்

## பொதுச்சின்னத்தில் போட்டியிட இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே பொதுஜன பெரமுனவுடன் கூட்டு

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)
ஜனாதிபதியாக ஆட்சிப்பீடத்தில் அமர நினைக்கும் எந்த வேட்பாளராக இருந்தாலும் அவர்களுக்கு ஒத்துழைப்பு அவசியம் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

பொதுச்சின்னத்தில் ▶23

### சம்பளப் பிரச்சினை

## அமைச்சரவைக் குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)
அரச துறையினரின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்காக நியமிக்கப்பட்ட துணை அமைச்சரவைக் குழு இன்று கூடுகிறது.

அரச துறை சம்பளப் ▶23

### புதுக்குடியிருப்பு சுதந்திரபுரத்தில்

## வெடிபொருட்கள் மீட்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள் ▶23



### வவுனியாவில்

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(வவுனியா)
வவுனியா தேக்கவத்தை பகுதியில் ஹெரோயினை உடைமையில் வைத்தி ▶23

### சஜித்துக்கு ஆதரவு தொடர்பில்

## ஐ.தே.க - கூட்டமைப்பு இன்று உயர்மட்ட பேச்சு

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான ▶23

## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் நாறோ நிறுவனத்தில் செயற்றிட்டமுகாமையாளராக பணியாற்றுவதற்கு அதாவது புதிய செயற்றிட்டங்களை ஆங்கிலத்தில் வரையும் ஆற்றல் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேதனம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 15.10.2019 தொலைபேசி இல : 021 228 3659, மின்னஞ்சல் முகவரி - nahrongo@gmail.com (C-7743)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## சிவபதப்பேறெய்திய 31ஆம் நாள் நினைவுத்துதி



அராலி வடக்கு
அமரர் அப்புக்குட்டி வேலாயுதர்
*(வேலாயுத சுவாமிகள்)*
அன்னைமடியில் : 19.02.1931
ஆண்டவன் அணைப்பில் : 31.08.2019

சீர்மேவும் அராலியூர் ஈன்றெடுத்த தவப்புதல்வன்
பாரினில் பலரும் போற்றும் பண்பாளன்
அணைந்தாரை அரவணைக்கும் அன்பாளன்
பேரருளுக்கிடமான அருளாளன்
மக்கள் சேவையே தம் தலைவன் காட்டிய வழியென்று
மகிழ்ச்சியோடு கடமை புரிந்த இறைபணியாளன்
சிவ தொண்டனாகி என்றும் சிவசின்னம் தரிப்பார்
சிரிப்புடனே கதைகள் பேசிக்கருத்தூன்றவைக்கும் நல்லாசான்
கண்டுபிடிக் கண்டதை வெளிப்படுத்தும் வழிகாட்டி (Councillor)
பிள்ளைகளைச் சீராட்டிச்சிறப்பித்த தலைசிறந்த குடும்பத்தலைவன்
ஊதியம் இன்றி ஊர்மக்கள் நலம்காத்த கருணையாளன்
இரண்டாயிரத்துப்பத்தொன்பது ஆவணித்திங்கள்
வளர்பிறைத்துப்பிரதமையில் தெய்வத்துள் தெய்வமாகி
திருவடிப் பேறுபெற்றார் - இம்மண்ணுலகில்
அப்புக்குட்டி வேலாயுதர் எனும் திருநாமம் தரித்த பேராளன்
அவர்தம் திருத்தாள் போற்றுதல் இன்று எம் நெஞ்சத்து நிலை

(417)

என்றும் நினைவில் வே.சிவசுந்தரம்
ஓய்வுநிலை அதிபர் - மானிப்பாய், சகோதரர்கள் - அராலி மத்தி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### கலாநிதி சி.மகேந்திரன்


(யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் - மிருதங்கம்)

அவர்களின் இசைத்துறைக்கான உன்னத சேவையைப் பாராட்டி தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு **மனோகணேசன்** அவர்கள் **"கலைமாமணி"** எனும் விருது வழங்கி கௌரவித்தமையை நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம். (467)

வார இறுதிநாள் மிருதங்க மாணவர்களும் பெற்றோர்களும்
"தமிழ் மரபுக்கலாலயம்", யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி செல்லம்மா



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லம்மா அவர்கள் 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-7741)

தகவல் - குடும்பத்தினர்
076 607 9705 / 077 411 1253



## மரண அறிவித்தல்

### கந்தையா அருமைத்துரை

(முன்னாள் முகாமையாளர் - சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருமைத்துரை அவர்கள் கடந்த (27.09.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், நீதிமலரின் அன்புக் கணவரும், காந்திமதி (நிறமதி - சுவிஸ்), சுரேஸ்குமார் (ஆசிரியர் - யா/உடுவில் புதுமடம் றோ.க.த.க பாடசாலை), காலஞ்சென்ற ஹரிகரன் (நந்தன்) மற்றும் நளினி (வளர் - பிரான்ஸ்) கிரிஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானேஸ்வரன் (சுவிஸ்), ஞானேஸ்வரன் (பிரான்ஸ்), மதியுகன் (தாதி உத்தியோகத்தர், யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமனாரும், தஷானி, தஷாந், தர்மிஷன், டக்சிகா, டானுசன், ரிஷாந், யானுஷா, ஆஹீர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, விசாலாட்சி, பாலசுப்பிரமணியம் மற்றும் இராசம்மா, சிவம், சோதிமலர், தனலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (470)

இணுவில் தெற்கு, இணுவில். 077 935 3563 / 021 438 5807 தகவல் : பா.மதியுகன் (மருமகன்)

## தந்தை வழியில் செயற்படுவேன்-சஜித் உறுதி

# பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில்

# தமிழ் மக்களுக்குப் பல துன்பங்கள்

## யோகேஸ்வரன் நினைவுபடுத்தல்

(ஏறாவூர்)

சஜித் தனது தந்தை பிரேமதாஸவின் வழியில் தான் செயற்படுவேன் என உறுதி கூறிக் கொண்டு வருகிறார். உண்மையிலேயே அவரின் தந்தையின் ஆட்சிக் காலத்தில் பல துன்பியல் நிகழ்வுகள் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டன. அது வரலாற்று ரீதியாக என்றும் மறக்க முடியாத உண்மை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன சுட்டிக்காட்டினார்.





மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரன் தனது அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் போது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுவாக சஜித் பிரேமதாஸவின் வீட்டுத் திட்ட நிகழ்வில் கலந்துகொள்ளும் போது எதிர்கால ஜனாதிபதியாக வரவிருப்பவர் என்ற ரீதியில் அவருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்திருக்கின்றோம். ஆனால், ஆதரவு கொடுப்போம் என்ற சொல்லை நாங்கள் பாவிக்கவில்லை.ஏன் என்றால் எதையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்துத் தான் முடிவெடுக்க வேண்டும்.

சஜித் பிரேமதாஸவைப் பொறுத்த வரையில் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் அதேபோன்று புதிய அரசியல் யாப்பு உருவாக்குவது தொடர்பான நடவடிக்கைகளில் அவரின் ஈடுபாடு எங்களைப் பொறுத்தவரையில் மிகக் குறைவாகவுள்ளது.

சஜித் தனது தந்தையின் வழியில் தான் செயற்படுவேன் என்பதில் உறுதி கூறிக்கொண்டு வருகிறார். உண்மையிலேயே அவரின் தந்தையின் ஆட்சிக் காலத்தில் பல துன்பியல் நிகழ்வுகள் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டன. அது வரலாற்று ரீதியாக என்றும் மறக்க முடியாத உண்மை.

ஆகவே, அவருடன் நாங்கள் பல விடயங்கள் குறித்துப் பேச வேண்டும். அவர் எங்களின் கோரிக்கைகளுக்கு இணங்குவாராக இருந்தால் தான் அவரது நிலைமையை அவருக்குச்சார்பாக போவதைப் பரிசீலிக்கலாம்.எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வு எங்களுக்கு மிக முக்கியமானது.

அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சியாக இருக்கலாம் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாக இருக்கலாம் அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவாக இருக்கலாம், யார் எங்களுக்கு நியாயமான தீர்வை வழங்க வருகின்றார்களோ எங்களது கோரிக்கைகளுக்கு ஏற்ப சரியான தீர்வை வெளிப்படுத்துகின்றார்களோ அவர்களுக்குத் தான் எங்கள் ஆதரவு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரத்தக்கறை படிந்தவர்கள் ஆட்சி பீடம் ஏறும் யுகம் இனி உருவாகக் கூடாது

## கோடீஸ்வரன் கூறுகிறார்

(காரைதீவு)

மக்களைக் கொன்று புதைத்து இரத்தக்கறை படிந்தவர்கள் ஆட்சி பீடம் ஏறும் யுகம் உருவாகக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் ஏழை மக்களோடு மக்களாகச் செயற்படுகின்ற அனைத்து மக்களையும் ஒரே விதமாகப் பார்க்கின்ற சிறந்த வேட்பாளர் எமக்குக் கிடைத்திருக்கின்றார் எனவும் அவர் தெரிவித்தார்.

காரைதீவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பவராகவும் சிறுபான்மை மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை மிக இலகுவாகக் கையாள்பவராகவும் இருக்க வேண்டும்.

வேட்பாளர்களாக வருகின்ற போது பல வாக்குறுதிகளை மக்களிடையே அள்ளி வீசுகின்றார்கள். பின்னர் வீசப்பட்ட வாக்குறுதிகள் காலம் கடந்து மரணித்துப் போகின்றன.

கடந்த காலங்களிலே எங்களுடைய மக்களைக் கொன்று புதைத்து இரத்தக்கறை படிந்தவர்கள் வேட்பாளர்களாக வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வேட்பாளர்களை எமது சமூகத்தினர் ஆதரிப்பார்களாயின் மீண்டும் ஒரு இருண்ட யுகத்துக்கு தள்ளப்படுவார்கள்.

இறுதி யுத்தத்தில் இலட்சக் கணக்கான மக்கள் கொத்துக் கொத்தாக நிலத்துக்கு உள்ளே புதைக்கப்பட்டார்கள். இவற்றுக்கெல்லாம் காரணமானவர்கள் மீண்டும் ஆட்சி பீடம் ஏறும் யுகம் உருவாகக் கூடாது.

ஏழை மக்களோடு மக்களாகச் செயற்படுகின்ற அனைத்து மக்களையும் ஒரேவிதமாகப் பார்க்கின்ற சிறந்த வேட்பாளர் எமக்கு கிடைத்திருக்கின்றார். அவரை நாங்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு நன்றாகத் தெரியும். தமிழ் மக்கள் சரியான நேரத்தில் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வேட்டைக்குச் சென்றவர்களின்

# துப்பாக்கிக் குண்டு பாய்ந்து 14 வயதுச் சிறுவன் பலி!

(கரடியனாறு)

மட்டக்களப்பு, கித்துள் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன் 4 பேர் வேட்டைக்குச் சென்ற நிலையில் குறித்த துப்பாக்கி தவறுதலாக இயக்கப்பட்டதில் 14 வயது சிறுவன் பரிதாபமாகப் பலியானான்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த சிறிகாந்தன் தனு என்ற சிறுவன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்; வசந்த கரன்னகொடவிற்கு எதிரான வழக்கைத் துரிதப்படுத்தும் சி.ஐ.டி.

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டு கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் புதிய அறிக்கைகளை பதிவு செய்தது.



அந்தவகையில் கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் கரன்னகொடவிடமிருந்து அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆண்டு மார்ச் 11, 13, 19 மற்றும் ஏப்ரல் 2 மற்றும் 4 ஆகிய திகதிகளில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகளை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் முடிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீர்மானித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 124 ஆவது பிரிவின் படி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கடந்த வாரம் வசந்த கரன்னகொடவிடம் விசாரிக்கப்பட்டது.

"உடல்நிலை காரணத்தை சுட்டிக்காட்டி, தனது குடும்பத்தில் ஒரு உறுப்பினருக்கு உதவ வேண்டும் என்ற அடிப்படையில் இரண்டு வார கால அவகாசம் கோரியதன் மூலம், கடந்த செப்டெம்பர் 20 மற்றும் 21 ஆகிய திகதிகளில் வாக்குமூலம் பதிவு செய்வதை வேண்டுமென்றே கரன்னகொட தவிர்க்க முயன்றார்" என குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட "பி" அறிக்கையில் குற்றம் சாட்டியது.

அத்தோடு செப்டெம்பர் 19 ஆம் திகதி அன்று கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியில் கரன்னகொட கலந்து கொண்டதாக சி.ஐ.டி. நீதிமன்றத்தில் தெரிவித்தது.

எனவே, செப்டெம்பர் 24 ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்குள் முன்னாள் கடற்படைத் தளபதியை வரவழைக்கவும், சான்றுகளை திணைக்களத்திற்குப் பரிந்துரைக்கவும் சட்டமா அதிபர் அளித்த அறிவுறுத்தலின் படி, நீதிமன்றம் உத்தரவை பிறப்பித்தபோது, கரன்னகொடவிடமிருந்து புதிய அறிக்கையை பதிவு செய்ய நீதிமன்ற உத்தரவை சி.ஐ.டி. கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சேஸிங்கில் சதம் அடித்து அசத்திய நேபாள அணித் தலைவர்



சர்வதேச இருபதுக்கு - 20 கிரிக்கெட் போட்டியில் சேஸிங்கின்போது சதம் அடித்த முதல் தலைவர் என்ற சாதனையை நேபாள கிரிக்கெட் அணித் தலைவர் பரஸ் கட்கா படைத்துள்ளார்.

சிம்பாவே-நேபாளம்- சிங்கப்பூர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு போட்டி, சிங்கப்பூரில் நடந்து வருகிறது.

நேற்று முன்தினம் நடந்த போட்டியில் சிங்கப்பூர்-நேபாள அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய சிங்கப்பூர் அணி, 20 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்தது.

152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது நேபாள அணி. அந்த அணியின் தலைவர் பரஸ் கட்கா அதிரடியாக விளையாடி 49 பந்துகளில் சதமடித்தார்.

அவர் மொத்தம் 52 பந்துகளில் 106 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். இதன் மூலம் சர்வதேச இருபதுக்கு -20 கிரிக்கெட் வரலாற்றில் சேஸிங்கில் சதம் அடித்த முதல் தலைவர் சாதனையை அவர் பெற்றார்.

ஏற்கனவே ஒரு நாள் போட்டியில், சதம் அடித்த முதல் நேபாள வீரர் என்ற பெருமையை பெற்றுள்ள பரஸ், இருபதுக்கு - 20 போட்டியிலும் சதமடித்த முதல் நேபாள வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

சேஸிங்கில் அவுஸ்திரேலிய வீரர் ஸ்மித் இங்கிலாந்துக்கு எதிராக 90 ஓட்டங்களும் கிறிஸ் கெய்ல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 88 ஓட்டங்களையும், விராட் கோலி, இலங்கைக்கு எதிராக 82 ஓட்டங்களையும் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தங்கப் பதக்கம் வென்றார் கோல்மேன்




உலக தடகளப் போட்டியின் 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் அமெரிக்க வீரர் கிறிஸ்டியன் கோல்மேன் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

100 மீட்டர் தூரத்தை 9.76 வினாடிகளில் கடந்து அவர் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

மற்றொரு அமெரிக்க வீரரான ஜஸ்டின் காட்லின் 9.89 வினாடிகளில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

அத்துடன், கனடா வீரர் ஆன்ட்ரி டி கிராசுக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

பெண்களுக்கான 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப் பந்தயத்தில், நெதர்லாந்தைச் சேர்ந்த சிபான் ஹசன் 30 நிமிடம் 17.63 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

எத்தியோப்பியாவின் லெட்சன்பெட் கிடேவுக்கு வெள்ளிப் பதக்கமும், கென்யாவின் ஏக்னஸ் டைரப்பிற்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தது.

உலக தடகளப் போட்டி கட்டாரில் நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நவரத்தினராஜா வள்ளிப்பிள்ளை

பிறப்பு :- 04.03.1928
இறப்பு:- 17.05.2018

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

புற்றளை,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C-7747)


# 43 வயதில் புதிய சாதனை




உலக சம்பியன்ஷிப் நடை பந்தயத்தில் பதக்கம் வென்று 43 வயதான வீரர் சாதனை படைத்துள்ளார்.

கட்டாரில் நிலவும் கடும் வெயிலுடனான காலநிலை காரணமாக இரவில் நடைபெற்ற 50 கிலோ மீட்டர் நடைபந்தயத்தில் ஆண்கள் பிரிவில் ஜப்பானைச் சேர்ந்த யூசுகே சுசுகி தங்கப்பதக்கத்தினை சுவீகரித்துள்ளார்.

43 வயதான போர்த்துக்கேய வீரர் ஜோவா வியேரா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இதன்மூலம் பதக்கம் வென்ற மிக வயதான வீரர் என்ற புதிய சாதனையை அவர் படைத்துள்ளார்.

கனடாவைச் சேர்ந்த இவான் டன்பி வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியிருந்தார்.

இதேவேளை, பெண்களுக்கான 50 கிலோ மீட்டர் நடைப் பந்தயத்தில் சீனாவின் ருய் லியாங் தங்கப் பதக்கத்தையும், கட்டாரின் மாவோகுலி மற்றும் இத்தாலியின் எலியோனாரா கிரிஜியோ முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்திருந்தனர்.

## தேசியத்தில் சாதனை

முல்லைத்தீவு மாவட்டத்தின் மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம் இரண்டாவது தடவையாகவும் தேசிய சாதனையைப் படைத்துள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியில் வில்லுப்பாட்டு நிகழ்வில் தேசிய மட்டத்தில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்று முல்லை மண்ணுக்கு மீண்டும் ஒரு பெருமையைச் சேர்த்துத் தந்துள்ளது.



ஆசனத்தில் இடமிருந்து வலம்:- திருமதி சந்திரா சசீகரன். 2.திருமதி சாந்தகுமாரி கமலகாந்தன். 3.திரு.த.முராரி 4.திரு.க.திருக்குமரன் (அதிபர்) 5.திரு.செ.உதயகுமார் 6. திருமதி ஜெயந்திமதி ஒளித்திலகன் 7.திருமதி சித்திராதேவி அன்ரனி அமலதாஸ்.

நிற்பவர்கள்:- இ.ரிலக்சன் 2.ம.துசீபன் 3. ஜெ.ஜெனார்த்தனன் 4.தே.சாலினி 5. ப.சுயாங்கன் 6 சு.தினேஸ்கரன் 7.ப.டிஸ்மிதன்

# இருபதுக்கு இருபது போட்டியில் சாமரி அத்தப்பத்து அசத்தல் சதம்



இலங்கை மகளிர் கிரிக்கட் அணிக்கும், அவுஸ்ரேலிய மகளிர் கிரிக்கட் அணிக்கும் இடையிலான முதல் இருபதுக்கு இருபது போட்டியில் அவுஸ்ரேலிய அணி 41 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ் ரேலிய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய அவுஸ்ரே லிய மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்ரேலிய மகளிர் அணி சார்பில் Mooney 113 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து 218 என்ற கடினமான இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை மகளிர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்று 41 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

இலங்கை அணிசார்பில் கடைசி வரை போராடிய இலங்கை மகளிர் அணியின் தலைவி சாமரி அத்தபத்து 113 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.



வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

(படங்கள் மகாலிங்கம்)




## சின்னப் பிரச்சினை

சின்னப் பிரச்சினை

### விரைவில் தீர்வு-யாப்பா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான சின்னம் தொடர்பான பிரச்சினைகள் விரைவில் தீரும் என மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சின்னத்தை மாற்றியமைக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இந்தச் சின்னமானது. தற்போது அனைவருக்கும் பரீட்சார்த்தமாகியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து நாம் அனைவரும் ஒரே பயணத்தைத் தான் மேற்கொள்ளவிருக்கின்றோம்.

எனவே, இந்த விடயத்தில் சின்னம் தொடர்பான பிரச்சினைகள் தேவையில்லை என்பதே எமது நிலைப்பாடு.

இந்தப் பிரச்சினை விரைவில் தீரும் என்றே நான் நினைக்கின்றேன்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஏமாற்றம்!

(கொழும்பு)

இலங்கையின் பிரதான அரசியல் (ஆளும்) கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடந்த வாரம் தனது ஜனாதிபதி வேட்பாளரை மிகவும் ஆடம்பரமாக அறிவித்தது.

இருந்த போதிலும், கட்சியின் உத்தியோகபூர்வ இணையத்திற்குச் சென்றவர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே.

கட்சியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் யானைச் சின்னத்துடன் கட்சியின் பெயரையும் (அதாவது ஐக்கிய தேசிய கட்சி) கீழே "பணிகள் இடம்பெறுகின்றன" என்ற சொற்களை மட்டுமே கொண்டிருந்தது.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அக்கட்சியின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை பார்ப்பதற்காக இணையத்திற்கு செல்பவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இந்த விடயம் தற்போது சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தீயில் சிக்கிய இளைஞன் பலி!



(வெல்லம்பிட்டி)

வெல்லம்பிட்டி பகுதியிலுள்ள கடையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 21 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குறித்த தீ விபத்து காரணமாக நான்கு கடைகள் தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

பிரதேச மக்கள் மற்றும் தீயணைப்புப் படையினரின் உதவியுடன் குறித்த தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இதன்போது, தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸ் குற்றவியல் விசாரணை அதிகாரிகளின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)


# திறன் வகுப்பறைத்திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் சிறுவர் தினமும் திறன் வகுப்பறைத் திறப்பு விழாவும் நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெறும். (இ-114)

# இருபாலையில் 84 வீடுகள் அமைப்பு கடன் சுமையால் திண்டாடும் பயனாளிகள்





(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள இருபாலை தெற்கு ஜே/257 வீட்டுத்திட்டத்தில் 84 வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு உரிய நீதி கிடைக்காததால் கடன் சுமையால் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்கு உரிய காலப்பகுதியில் நிர்மாணத்துக்கு ஏற்ற வகையில் பிரதேச செயலக அதிகாரிகளால் நிதி வழங்கப்படுவது வழமை.

இவ்வாறான நிலையில் இருபாலையில் 84 வீடுகளுக்கு முதற்கட்ட நிதியாக அத்திபாரம் இடுவதற்காக 70 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 20 பயனாளிகளுக்கு மட்டும் கடந்த வாரம் தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்ட நிலையில் ஏனையவர்களுக்கு நிதி வழங்கப்படவில்லை.

வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரு மாதங்கள் கடந்த நிலையில் தாம் வாழ்ந்த தற்காலிகக் குடிசைகளையும் அகற்றிவிட்டு அல்லற்படுவதாகவும் வீட்டை விரைவாக அமைத்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் ஆரம்பித்த தமக்கு நிதி வழங்கப்படுவது தாமதமாகவே உள்ளது எனவும் கவலை வெளியிட்டனர்.

கொட்டும் மழையில் அயல் வீடுகளில் தஞ்சம் புகும் நிலையில் காணப்படும் தாம் தமது வீட்டை பாதுகாப்பாக அமைத்து விட வேண்டும் என்ற நோக்கத்துடனும் தமக்கான நிதி விரைவாகக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையாலும் வங்கிகளில் கடன்களைப்பெற்றுநகைகளையும்அடகு வைத்ததாகவும் தெரிவித்தனர்.

வீட்டுத்திட்ட நிதி தாமதமாகக் கிடைக்கும் அதேவேளை குறித்த வீட்டுத்திட்டப்பயனாளிகளின் நகைகளுக்கான' வங்கி வட்டி வீதமும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே குறித்த மக்களின் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முன்வந்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தற்போது குறித்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டினர். (இ-10)

# ஒருவரின் பெயரின் அதிர்ஷ்டம்

## பெயரில் இவ்வளவு விடயங்களா?

**அதிர்ஷ்ட சோதிடம்**

இதற்கு பிரபலமாக திகழ்ந்த சிலரை உதாரணம் காட்டமுடியும். எம்.ஜி.ராம்சந்தர் என்ற பெயரில் இருக்கும்வரை எம்.ஜி.ஆர். பிரபலமாகவில்லை. எம்.ஜி.ராமச்சந்திரன் என்று பெயரை மாற்றிக்கொண்ட பிறகுதான் புகழ் பெற்றார்.

வி.சி.கணேசன் என்ற பெயர் சிவாஜி கணேசன் என்று மாற்றம் செய்த பிறகே நடிகர் திலகம் திரையுலகில் ஈடு இணையற்ற புகழை அடைந்தார்.

கணேஷ் என்ற பெயர் ஜெமினி கணேஷ் ஆன பிறகே ஜெமினியின் சகாப்தம் தொடங்கியது.

இந்திரா பிரியதர்சனி இந்திரா காந்தியாக மாறிய போதுதான் இந்தியாவுக்கே பிரதமரானார்.

நிறைய வீடுகளில் நடந்து வருகிற மாமியார்- மருமகள் சண்டைகளுக்கு கூட இந்தப் பெயர்ப் பின்னணி முன்னணியாக இருக்கும்.

நாடுகள், மாநிலங்களுக்குக் கூட இந்தப் பெயர் செய்யும் மாற்றம் கவனிக்கக் கூடியது.

இந்தியா என்ற பெயரில் குருவின் ஆதிக்கம் இருக்கிறது. வந்தாரை வாழவைப்போமே தவிர நாம் பெரிதாக முன்னேற வில்லை. இந்தியாவுக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒப் இந்தியா என்று பெயர் மாற்றினால் வல்லரசு நாடுகளில் ஒன்றாகி விடுவோம். இதை உறுதியாக கூற முடியும்.

பெயர் மாற்றம் சரி, நவரத்தின கற்கள் அவசியம்தானா?

கிரகங்களின் ஆதிக்கத்தில் தான் நாம் ஆட்டிப் படைக்கப்படுகிறோம். எனவே ஒவ்வொரு கிரகத்துக்கும் ஏற்ற விதத்தில் நவரத்ன கற்களை அணிந்து கொண்டால் நல்லதுதான்.

கிரகங்களின் ஒளி நேரடியாக கற்களின் மீதுதான் படுகிறது. எனவே கல்-கிரகம்-மனிதன் முன்னேற்றத்திற்கும் தொடர்பு இருக்கிறது.

முதலாவது எண்ணுக்குரிய நவக்கிரக சூரியன், இரண்டாவது சந்திரன், 3-குரு, 4-ராகு, 5 புதன், 6-சுக்கிரன், 7-கேது, 8-சனி, 9-செவ்வாய்.

முதலாம் எண்ணுக்குரிய சூரிய ஆதிக்கம் 1,10,19,28 ஆகிய எண்களுக்கு உண்டு.

இவை சூரிய ஆதிக்கம் என்பதால் இந்தத் திகதியில் பிறந்தவர்கள் தலைவலி, நீரிழிவு, இதய நோய், கண்நோய் போன்றவற்றுக்கு ஆளாக நேரிடும்.

பார்வைக் குறைவுக்காக கண்ணாடி அணிபவர்களில் பெரும்பான்மையானவர் இத்தகையோரே.

சூரிய ஆதிக்கம் இப்படி இருப்பதால்தான் இந்த பிறந்த நாளுக்குரியோர் கரட், முட்டை, பால், மீன் போன்ற உணவை தினசரி உண்டு சக்தி குறைவை ஈடுகட்ட வேண்டும்.

சூரிய கிரகணம் நடக்கும் போது அதை வெறும் கண்ணால் பார்த்தால் பார்வை போய்விடும் அபாயம் உண்டு என்று விஞ்ஞானிகள் அறிவித்தார்கள்.

காரணம் சூரிய கிரகத்துக்கு கண் பார்வையை குறைக்கிற ஆற்றல் உண்டு. சூரியனுக்கும், பூமியில் உள்ள புஷ்பராகம், மாணிக்க கற்களுக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. எனவே இந்தக் கற்களை சூரிய ஆதிக்கம் உள்ளவர்கள் அணிந்து கொண்டால் அதன் ஒளியில் இருந்து கிடைக்கும் இரசாயன மாற்றம் இந்த கிரகத்துக்குரியவர்களின் நோய் உள்ளிட்ட சகல பிரச்சினைகளையும் தீர்க்கும் அருமருந்தாக அமைந்து விடுகிறது. இப்படி ஒவ்வொரு கிரகங்களுக்கும் இருக்கிறது.

கட்டைவிரல்ரேகையை வைத்துக்கொண்டு நாடி ஜோதிடம் பார்க்கிறார்கள். ஓலைச் சுவடியில் ஜாதகம் பார்க்க வருபவரின் பெயர் கூறிவிடுவார்கள். பெயரியல் ஜோதிட அடிப்படையில் பெயர் மாற்றியவர்களில் சிலர் நாடி ஜோதிடம் பார்க்கப் போனபோது ஓலைச்சுவடி கிடைத்து வருகிறது. இது பெயரியல் ஆய்வுக்கு கிடைத்த பெரிய வெற்றி.

# புகையிரத தொழிற்சங்கங்கள்

## நான்காவது நாளாக பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

சம்பளப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு புகையிரத தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த பணிப்பகிஷ்கரிப்பு நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்தது.

சம்பளப் பிரச்சினைக்கு உரிய் தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரி கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு முதல் இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த 25 ஆம் திகதி முதல் மலையகத்திற்கான புகையிரத பாதையில் எந்தவொரு புகையிரதங்களும் பயணிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# நவராத்திரி விழாவில் "சக்தி தரிசனம்" சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிகரியபுலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவப் பெருமாள் ஆலயத்தில் நவராத்திரி வழிபாடுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. செந்நாப் புலவர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தனின் ஆன்மீக நெறிப்படுத்தலில் 9 தினங்களும் 9 பாடசாலை மாணவர்கள் ''சக்தி தரிசனம்'' என்ற கருப்பொருளில் சொற்பொழிவாற்றுகின்றனர். (இ-2)

# இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
உத்திரட்டாதி, ரேவதி

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | | | |
| | | | |
| சனி, கேது | குரு | புத | சந், சூரி, செவ், சுக் |

**30.09.2019**

புரட்டாதி 13, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துதியை முன்னிரவு 8.23 மணிவரை
சித்திரை முன்னிரவு 8.31 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
திருப்பதி வெங்கடாஜலபதி கொடி

வளவன்

**மீனம்**: காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**மேடம்**: நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், பொன்னான நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**இடபம்**: குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.

**மிதுனம்**: பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கும்பம்**: நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல் நலன் சீராகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள் ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், போசன நன்மையுண்டு.

**கடகம்**: புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்**: விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்**: சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன நன்மையுண்டு.

**தனுசு**: வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்**: ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தேவையற்ற மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்**: தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு, திட்டமிடாத காரியமொன்று இன்று நடைபெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி**: சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் ரீதியான முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

# பிணைமுறி மோசடியாளர்களைப் பாதுகாப்பேன்; கட்சியிலுள்ள கள்வர்களுடன் சஜித் ஒப்பந்தம்

## பவித்ரா பகிரங்கக் குற்றச்சாட்டு புத்திசாலிகள் கோத்தாவுக்கு வாக்களிப்பார்களாம்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடியில் ஈடுபட்டவர்களைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி பகிரங்கமாகக் குற்றம்சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகச் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

கோத்தபாயவை வெற்றி பெறச் செய்ய பொதுஜன பெரமுனவாகிய நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் தாங்கள் சுமுகமாக இருப்பதாக உலகிற்கு காண்பிக்க அவர்கள் முயற்சிக்கின்றனர்.

ரணில், சஜித் ஆகிய இருவருக்கும் இடையிலான பிரச்சினை தொடர்ந்து நீடிக்கும். கோத்தபாயவை வெல்ல வைக்க எங்களுக்கு ஒரு விசேட திட்டம் தேவையில்லை. ஏனெனில்ரணில் விக்கிரமசிங்கவின் ஆதர வாளர்கள் சஜித் பிரேமதாஸவை தோற்கடிக்கத் திட்டங்களை உருவாக்கி வருகின்றனர்.

சஜித் பிரேமதாஸ என்பவருக்கு கட்சிக்குள் ஆதரவு இருந்தாலும் அது தேர்தல் செயற்பாட்டில் தீர்க்கமான காரணியாக அமையாது. வாக்காளர்களுக்கு சஜித் பிரேமதாஸ ஒரு ஜோக்கராக மாறியுள்ளார். உயரமானால் காவலாளி, குள்ளமானால் தொழிலாளி என்று கூறியவர் நாட்டுக்குப் பொருத்தமற்றவர்.

இவ்வாறானவர்களால்நாட்டை நிர்வகிக்க முடியாது என புத்தியுள்ளவர்களுக்குத் தெரியும். நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல தூர நோக்குடைய ஒரு திட்டம் தேவை.

நாட்டைக் கட்டியெழுப்பக் கூடிய நிகழ்ச்சி நிரலை முன்வைக்க வேண்டும். ஆனால் தனது தந்தையின் யுகத்தை போன்றதொரு யுகத்தை ஏற்படுத்தப் போவதாக சஜித் கூறி வருகின்றார்.

அன்று இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பைத் தருவதாகக் கூறி ஏமாற்றினர். பல சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் படுகொலை செய்யப்பட்டனர். குறிப்பாக கென்ரீமா விதாரனவின் படுகொலை, ச்சரித லங்காபுர, சாகரிக்கா கோமஸ், மற்றும் பிரேம கீர்த்தி டி அல்விஸ் ஆகியோரின் கொலை தொடர்பில் என்ன சொல்ல போகின்றீர்கள் எனக் கேட்க விரும்புகின்றேன்.

பிரேமதாஸ காலத்தில் இளம் வயதில் நாம் சந்தித்த கொடூரத்தை மீண்டும் எதிர்கொள்ளக் கூடும். வரலாறு புதுப்பிக்கப்படுகின்றது. எனவே இத்தகைய வன்முறையாளர்களை அனுமதிக்க வேண்டாம் என நாட்டின் தாய்மார்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

சஜித் பிரேமதாஸ ஏற்கனவே கட்சியில் உள்ள கள்வர்களுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டார். அதற்கமைய மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றவாளிகளைத் தண்டிக்காமல் இருக்க ஒப்பந்தமொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

மற்றையது அரச சொத்துக்களைப் பயன்படுத்தி 10 சீமெந்து மூடைகளைப் பகிர்ந்தளித்தமை மக்களின் ஜனநாயக உரிமைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் அரசியலில் ஈடுபட்டமை குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படாது.

சஜித் பிரேமதாஸவின் அரசியல் நண்பர்கள் அவரது கல்வி நிலை குறித்து பேசுவதைப் பற்றி கவலைப்பட ஒன்றுமில்லை. ஏனென்றால் இந்த சீமெந்து மூடைகளை பகிர்ந்தளித்தமையின் மூலம் அவரது இரண்டாம் தர செயற்பாட்டை விளங்கிக் கொள்ள முடியும்.

உலகமயமாக்கப்பட்ட நாட்டில் பத்து மூடை சீமெந்துகளை வழங்கி மக்களின் வாக்குகளைப் பெற முடியும் என சஜித் பிரேமதாஸ நினைக்கின்றார்.

ஆனால் புத்திசாலிகள் சரியான திட்டமும் பார்வையும் கொண்ட நபருக்கு வாக்களிப்பார்கள்.

ஆகவே கோத்தபாய ராஜபக்ஷவை எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு அனைத்து தரப்பினரும் எம்முடன் ஒன்றிணைந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரணிலின் மானசீகப் பிரார்த்தனை சஜித் தோல்வியடைய வேண்டும்

## ஜெயக்கொடி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மானசீகப் பிரார்த்தனை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தோல்வியடைய வேண்டும் என்பதாகும் என கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்ய வேண்டுமாக இருந்தால், தான் வேட்பாளராக வரவேண்டும் என முன்னர் அறிவித்திருந்த ரணில் விக்கிரமசிங்க, தற்பொழுது சஜித் பிரேமதாஸவை களமிறக்கியிருக்கின்றார் என்றால் தோல்வி அடைவது நிச்சயம் என்பதனால் ஆகும் எனவும் சிசிர ஜெயக்கொடி சுட்டிக்காட்டினார்.

ரணில் விக்கிரமசிங்கதான் தற்பொழுது கட்சியின் தலைவராக இருக்கின்றார் எனவும், அவரின் ஒரே நோக்கம் வழக்கம் போன்று எதிர்க்கட்சியின் தலைவராக செயற்படுவதேயாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளர் சஜித்திற்கு முன்னாள் அமைச்சர்கள் ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க முன்னாள் அமைச்சர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர்.

இதனடிப்படையில் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் அசோக வடிகமங்காவ, பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதியமைச்சர் திலக் மஹாலேக்கம்கே, புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதியமைச்சர் நியோமால் பெரேரா,

காலி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் நந்திமித்ர செய்சா, கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சமந்தா கருணாரத்ன ஆகியோர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் உபாலி பியசோம தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டு ரீதியான அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த முன்னாள் அமைச்சர் உபாலி பியசோம, அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கடந்த 26 ஆம் திகதியே சிறிகொத்தவிற்கு சென்று சஜித்தை சந்தித்து அவரது தேர்தல் பணிகளில் பங்களிப்பு வழங்க இணக்கம் வெளியிட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் கட்சியில் இணைக்கும் பொறுப்பை அமைச்சர் சஜித் பிரேமதாஸ, உபாலி பியசோம மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோருக்கு வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


உங்கள் மனநிலை

யாருடனாவது பேசவேண்டும் போல இருந்தால், தயங்காமல் எம்மை அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.

எமது அமைப்பில் மதமும், அரசியலும் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. ரகசியம் பேணுவோம்.

கை கொடுக்கும் நண்பர்கள்

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)

077 900 8776 (தினமும் மு.ப 9.00 - பி.ப 1.00)

எங்கும் கிடைக்காத மாபெரும் விலைக்கழிவு!

12,000/- கழிவு

நீர் பரிசோதனை இலவசம்...!

பொருத்துதல் இலவசம்...!




SPECIAL OFFER

~~42,000/-~~

30,000/- மட்டுமே..

* நியந்தனைகளுக்குட்பட்டது.

2019 ஒக்ரோபர் 01 முதல் 5 வரை

"Smart Water Smart life"

உங்கள் வீட்டிலுள்ள நீர் தொடர்பான ஆலோசனைகளுக்கு...

Yarl Smart Water Solution (Pvt) Ltd

No. 341, K.K.S Road, Jaffna.

Hotline:- 076 666 5267 , 077 473 9802

yarlsmartwater@gmail.com www.yarlsmartwater.com

# கிளிநொச்சியில் தமிழர் பண்பாட்டு பெருவிழா










(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஏற்பாட்டில் தமிழர் பண்பாட்டு பெருவிழா நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த பெருவிழாவானது நலிவுற்று வரும் தமிழர்களது பாரம்பரிய கலைகளை வெளிக்கொணருமுகமாக தமிழர்களது தொன்மைக் கலைகளை மையமாக வைத்து முன்னெடுக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வாக மாபெரும் பண்பாட்டுப் பேரணி ஒன்று கிளிநொச்சி நகரப் பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து எழுச்சியுடன் ஆரம்பமாகி கிளிநொச்சி டிப்போ சந்தியிலுள்ள பசுமைப்பூங்காவில் நிறைவுற்றது.

இந்தப் பண்பாட்டுப் பேரணியானது தமிழர்களது தொன்மைக்கலைகளான பறை, இன்னியம், பொய்க்கால் குதிரை ஆட்டம், பொம்மலாட்டம், மயிலாட்டம், சிலம்பாட்டம், தீப்பந்த நடனம், கோலாட்டம், கரகம் மற்றும் காவடி ஆட்டங்களுடன் மங்கல இசை முழங்க பண்டைய தமிழ் அரசர்களது உருவப் பிரசன்னத்துடன் இடம்பெற்றது.

இரண்டாவது நிகழ்வாக பசுமைப்பூங்காவில் ஆரம்பமாகிய கலை நிகழ்வுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற நடன அளிக்கைகள், நாடக ஆற்றுகைகள், "மருதங்கிளி" என்னும் மலர்வெளியீடு, வழக்காடு மன்றம், கவியரங்கம், அண்மையில் தேசிய விருது பெற்ற கிளி. மத்திய மகா வித்தியாலய மாணவர்களது "வாளாட்டம்" சிறப்பு நடன அளிக்கை, தாயகக் கலைஞன் சத்தியானந்தன் நெறியாள்கையில் "மண் குளியல்" என்னும் சிறப்பு நாடக ஆற்றுகை இவற்று டன் கரைச்சி பிரதேச சபையின் மூத்த கலைஞர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் படைப்பாளிகளுக்கான அதி யுயர் விருது வழங்கல் நிகழ்வும் இடம் பெற்றது.

விழாவினது சிறப்பு நிகழ்ச்சியாக தாயகக் கலைஞன் செயல் வீரனது நெறியாள்கையில் தாயகத்து கலைஞர்கள் பங்குபற்றும் "அமுதகானங்கள்" இசை நிகழ்வும் இடம் பெற்றது. (9-315)




# பிக் போஸ் வீடு

## கிழித்த காதல் கடிதம் திணறிய தர்ஷன்

பிக்போஸ் நிகழ்ச்சியின் மீது தனி ஒரு கூட்டத்திற்கு கடும் அதிருப்தி எழுந்துள்ளது. காரணம் ஆரம்பம் முதல் இப்போதுவரை தர்ஷண் அனைத்து போட்டியாளர்களுக்கும் கடும் போட்டியாக இருந்தார். கொடுக்கப்பட்ட டாஸ்க் அனைத்தையும் சிறப்பாக செய்தார். எல்லோரிடத்திலும் சரியாக நடந்து கொண்டார்.

இருந்தாலும் ஷெரின் விடயத்தில் இவரின் பேர் மீதும் சிறு விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

எல்லாம் அந்த வனிதா செய்த வேலை என்பதை மறந்துவிட முடியுமா. இதில் பெரிய சண்டையே வெடித்தது. ஷெரின், தர்ஷன் இருவரும் நண்பர்கள்.



ஆனால் ஷெரின் தன் காதலை அவரிடம் மறைமுகமாக வெளிப்படுத்தி வந்ததை அனைவரும் அறிவார்கள்.இதெல்லாம் இருந்தாலும்தர்ஷனிடம் அண்மையில் ஷெரின் எழுதி கிழிந்து போட்ட காதல் கடிதம் பற்றி கேட்க பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார்.

## பயந்த கவின் அப்பாவா என்ற கமல் அதிர்ந்த அரங்கம்



பிக்போஸ் நிகழ்ச்சியின் இறுதிக் கட்ட பயணம் தொடங்கி விட்டது. அடுத்த வாரம் டைட்டிலை வெல்லப்போவது யார் என தெரிந்துவிடும்.

அண்மையில் கவின் நிகழ்ச்சியை விட்டு வெளியேறியது அனைவருக்கு அதிர்ச்சியே.


இது குறித்து வேறு விதமாக காரணங்கள் சொல்லப்பட்டாலும் உண்மை என்ன என்பது தெரியவில்லை.

இந்நிலையில் கவினை அழைத்து வெளியேறிய காரணங்களை கமல்ஹாசன் கேட்கிறார்.

அதேவேளையில் அவர் பணத்திற்காக வெளியேறவில்லை என்ற கருத்தையும் கமல் முன்வைக்கிறார்.

இது ஒருபக்கம் இருக்க அவர் லொஸ்லியாவிடம் ஆசகமாக பேசி கமலிடம் சிக்கிக்கொள்ள, உடனே கமல் நான் என்ன அப்பாவா, இப்படி பார்த்து பயப்படுறீங்க எனக் கேட்டு இன்ப அதிர்ச்சி கொடுக்கிறார்.

## லொஸ்லியாவுக்காக பொறுமை காத்தேன்




கவின் பிக்போஸ் வீட்டிலிருந்து வெளியே வந்தது பலருக்கும் ஷாக் தான். ஏனெனில் பைனல் வரை சென்றால் அவர் தான் கண்டிப்பாக டைட்டில் அடிப்பார் என்று இருந்தது.

ஆனால், அவர் வீட்டை விட்டு வெளியேறியது அதிர்ச்சி கொடுத்துள்ளது. இந்நிலையில் கவின் கமலை சந்தித்து பிக்போஸ் மேடையில் முழு விளக்கத்தையும் கொடுத்தார்.

அப்படி அவர் பேசுகையில், 'நான் கண்டிப்பாக ஒரு சில வாரம் கழித்து வெளியே போகும் எண்ணத்தில் தான் இருந்தேன்.


அப்போதே வந்திருந்தால் லொஸ்லியா இன்னும் மனம் உடைந்திருப்பார். கொஞ்ச நாட்கள் அதாவது, பைனல் முந்திய வாரம் வரை செல்வோம்.

கண்டிப்பாக ஒரு சான்ஸ் கிடைக்கும்.அப்போது வெளியே வந்துவிடலாம் என்று தான் இருந்தேன். அதேபோல் கிடைத்தது வந்துவிட்டேன்' என்று கவின் கூறியுள்ளார்.

# கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு புருசோத்தமன் எழுதும் அன்பு மடல்

*(இனி தமிழ் மக்கள் பேரவை தொடர்பிலும் எழுக தமிழ்-2019 எழுச்சிப் பேரணி தொடர்பிலும் என் கருத்துக்கள் உங்களுக்கான கடிதத்தில்...)*

வெள்ளிக்கிழமை தொடர்ச்சி...



05

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுக்கு அன்பு வணக்கம்!

கடந்த இரு தினங்கள் (சனி மற்றும் ஞாயிறு) தங்களுக்கான கடிதம் வெளியாகவில்லை. இன்று அந்தக் கடிதம் தொடர்கிறது. கடிதத்தின் உள்ளார்ந்தம் பெருந்தொடர் அன்று.

மாறாக விரைவாக இக்கடிதத்தை எழுதி முடிக்கப்பட வேண்டும் என்பது என் விருப்பம். அதை நிறைவேற்ற முற்படுகின்றேன்.

தவிர, தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் இக்கடிதத்தில் பிரஸ்தாபிக்க வேண்டும் என்பது என் முதன்மையான விருப்பம்.

இந்த விருப்பம் தங்களையும் தங்கள் கட்சியையும் மையப்படுத்தியது மட்டுமல்ல மாறாக தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் அடி நுனி தெரியாமல் விமர்சிப்பவர்களையும் ஆற்றுப்படுத்துகின்ற நோக்கில் இங்கு பிரஸ்தாபிக்க விரும்புகிறேன்.

இதை நாம் கூறும்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என்று பெயர் குறிப்பிட்டுக் கடிதம் எழுதுகையில் அந்தக் கடிதத்தில் மற்றவர்களின் மயக்கத்தைத் தெளிவுபடுத்துவது சரியா? என்ற கேள்வி எழும்.

அந்தக் கேள்வி நியாயமானதாயினும் இக்கடிதம் ஒரு உபதேசம் முறைமை சார்ந்தது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

மகாபாரதத்தில் தூதுப்படலம் நடந்தாகிறது. தூது வெற்றி பெறாதபோது உபதேச படலம் நடைபெறுகிறது. இந்த இரண்டு வகிபாகத்தையும் கிருஷ்ண பரமாத்மாவே செய்தார்.

ஒன்று கிருஷ்ண தூது. பாண்டவர்களுக்காக கிருஷ்ண பரமாத்மா துரியோதனனிடம் தூது செல்கிறார். யுத்தத்தை நிறுத்தி ஒற்றுமையை ஏற்படுத்துவது அந்தத் தூதின் நோக்கம்.

கிருஷ்ண தூது வெற்றி பெறாத நிலையில் குருஷேத்திரப் போர் நடந்தாகிறது. போரின் முதல்நாளில் தளர்வுற்ற அருச்சுனனுக்கு போர்க்களத்தில் வைத்து கிருஷ்ணன் உபதேசம் செய்கிறான். அதுவே கீதோபதேசம்.

இங்கு தூதுக்கும் உபதேசத்திற்கும் வேறுபாடு உண்டு. தூது இருப்பதை செம்மைப்படுத்துவது. உபதேசம் மாற்றத்தை ஏற்படுத்துவது. ஞானத்தை உண்டு பண்ணுவது. இந்த விளக்கத்தோடு என் கடிதம் உபதேசத்தின் பாற்பட்டது என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

இதை நாம் கூறும்போது தூதை விடுத்து உபதேசத்தின் பால் உங்கள் கடிதம் அமைந்தது எதற்காக? என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

அதில் ஒன்று தூதுக்கான காலம் கடந்து விட்டது. மற்றையது தூது என்பதில் தூதுவன் மட்டுமல்ல சம்பந்தப்பட்ட தரப்பும் வாதம் செய்யும்.

எனவே அங்கு முடிவைக் கண்டு கொள்வது சாத்தியமற்றது. மாறாக உபதேசம் என்ற படலத்தில் உபதேசிப்பவர், செவிமடுப்பவர் என்ற இருதரப்பு மட்டுமே இருக்க முடியும்.

இங்கு உபதேசிப்பவர் மட்டுமே பேசமுடியும். கேட்போர் கதைப்பதற்கு இம்மியும் இடமில்லை. இஃதும் அவ்வாறானதோர் இயல்புடையதுதான்.

இதை நாம் கூறும் போது இருதரப்பு வாதப்பிரதிவாதங்களுக்கு இடம்தராமல் ஒருதரப்பு மட்டும் நியாயம் உரைக்க மறுதரப்பு அதைக் கேட்பதாக ஆக்கப்பட்டிருப்பது தர்மத்தின் பாற்பட்டதா? என்று நீங்கள் கேட்கலாம்.

எம்மைப் பொறுத்தவரை இதுவே பொருத்தமான முறை என்று கருதினோம். ஏனெனில் உங்களுடனும் உங்கள் தரப்புடனும் தூதுகள் பல பக்கங்களிலும் நடந்தன. எதிலும் வெற்றி கிடைக்கவில்லை.

ஒவ்வொரு தூதையும் வாதம் செய்து வெல்வதிலேயே உங்களதும் உங்கள் கட்சித் தலைமைகளினதும் கவனம் இருந்தது.

தவிர, தூது என்ற விடயத்தில் வாதப்பிரதிவாதங்கள் செய்யப்பட்டு அதனடிப்படையில் முடிவு பெறப்படும். ஆனால் உங்களுடன் நடத்தப்பட்ட தூது முயற்சிகள் பற்றி நாம் அறிந்த வகையில், நீங்கள் முடிவை எடுத்துவிட்டே வாதப் பிரதிவாதங்கள் செய்கிறீர்கள்.

அதாவது வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டால் அதனடிப்படையிலேயே முடிவுக்கு வரவேண்டும். முடிவுக்கு வந்தபின்பு வாதப்பிரதிவாதம் செய்வது அர்த்தமற்றது.

நீதிபதி தீர்ப்பை எழுதுவதற்கு முன்னதாக வக்கீல் தனது வாதத்தை முன்வைக்க வேண்டும். மாறாக தீர்ப்பை எழுதிய பின்பு தர்க்கிப்பது அர்த்தமற்றது. அது எழுதப்பட்ட தீர்ப்பை எந்தவகையிலும் மாற்றியமைக்கப் போவதில்லை.

எனவே, உங்களுடனான தூது முயற்சிகள் வெற்றி பெறுவதென்பது சாத்தியமற்றது என்ற முடிவுக்கு வந்தோம். அதனால் தான் உபதேச வடிவில் அமைந்த அணுகுமுறை பின்பற்றப்படுகிறது.

இதைக்கூறுவதற்கு இவ்வளவு விளக்கமா? என்று கேட்டு விடாதீர்கள். மாறாக, தூது தராத வெற்றியை உபதேசம் தந்து விடலாம் என்ற நம்பிக்கையிலும்தான் இத்துணை விளக்கம் இங்கு முன்வைக்கப்பட்டது.

இனி தமிழ் மக்கள் பேரவை பற்றி இக்கடிதத்தில் நாம் பேசலாம்.

அன்புக்குரிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களே! தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் இயக்கமாக 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. மேற்குறித்த திகதியில் தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டாலும் அதற்கான கால்கோள் ஏற்பாடுகள் ஏலவே நடந்தன என்பது தாங்கள் அறிந்ததே. தமிழ் மக்களுக்கான அரசியல் என்பது எதையும் பெற்றுத் தரமுடியாத ஒரு சூழ்நிலைக்குள் ஆளாகியிருந்தது.

ஈழத்தமிழர்கள் தொடர்பில் வெளிநாடுகளின் நிலைப்பாடுகள் ஆரோக்கியமானதாக இருக்கவில்லை.

மாறாக, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்பதனை அணுகாமல், தமிழ் மக்களிடம் இருக்கக்கூடிய இனப்பற்றை, மொழிப் பற்றை, தாயகப் பற்றை வேறுத்து அவர்களை வேறு திசைக்குத் திருப்புகின்ற முயற்சிகளில் மட்டுமே ஈடுபட்டனர்.

இத்தகைய நிலைமைகள் அனைத்துத் தமிழ் மக்களின் மனங்களிலும் வேதனையைக் கொடுத்தது. இத்தகையதோர் சூழமைவில்தான் தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு மக்கள் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை முகிழ்த்தது.

அந்தச் சிந்தனை வெற்றி பெறுவதற்குப் பலரும் பங்காற்றினர். அதில் தங்கள் வகிபங்கு காத்திரமானது என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

மக்கள் இயக்கம் என்பதாக தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டாலும் அதற்குள் அரசியல் கட்சிகளும் அங்கம் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கவேண்டும் என்பது பேரவையை உருவாக்குவதில் முன்னின்று உழைத்த நீங்கள் உள்ளிட்ட அனைவரதும் விருப்பமாக இருந்தது. அந்த விருப்பத்தில் தவிர்க்க முடியாத நியாயம் உண்டு என்பது என் தனிப்பட்ட கருத்து.

(தொடரும்)

# நியாயமான கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்க தவறும் பட்சத்தில் த.தே.கூ. அரசுக்கு வழங்கும் ஆதரவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## தமிழர் மரபுரிமைப் பேரவை கோரிக்கை

(பனிக்கன்குளம்)

தமிழர் மரபுரிமை பேரவையால் ஐந்து அம்ச கோரிக்கைகள் தமிழரசு கட்சி உறுப்பினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த நியாயமான கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் செவிசாய்க்க தவறும் பட்சத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசிற்கு வழங்கும் ஆதரவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கோவில் குடியிருப்பு கிராம அலுவலர் அலுவலகத்தில் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதிநிதிகளுக்கும் தமிழர் மரபுரிமை பேரவை மற்றும் நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினருக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே குறித்த விடயம் தொடர்பான மகஜர் ஒன்று தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த மகஜரில் நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் தமிழ் மக்களின் பூர்வீக ஆலயமாகும். இவ்வாலயத்தைத் திட்டமிட்டு ஆக்கிரமித்து பௌத்த விகாரை அமைப்பதை உடன் நிறுத்த காத்திரமான அரசியல் அழுத்தங்களை வழங்க வேண்டும்.

வடமாகாணத்தில் வர்த்தமானி பிரசுரம் செய்யப்பட்ட தொல்லியல் பிரதேசங்கள், நம்பகத்தன்மையான தமிழ்த் தொல்லியல் ஆய்வாளர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், யாழ்ப்பாணப் பல்கலைகழகம், குறித்த பிரதேசங்களின் உள்ளூர் நிர்வாக மற்றும் கிராம மட்ட மக்களின் பங்களிப்புக்கள் உடன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு இறுதி செய்யப்படும் வரை, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட இடங்களில் தற்போதுள்ள இடங்களை விட மாற்றங்கள், திரிபுபடுத்தல்கள், புதிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படாது பேணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அரசாணை ஒன்றினை உடன் வெளியிட குறித்த அமைச்சிடம் இருந்து எழுத்துமூலமான வாக்குறுதி பெறப்பட வேண்டும்

வடமாகாணத்தில் மகாவலி "L" அபிவிருத்தி வலயம் மூலம் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்களமயமாக்கல் தற்போதும் தொடர்ந்து இடம்பெறுவதால் குறைந்த பட்சம் 2007ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படுவதுடன் 1988ம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் எல்லைக்கிராம தமிழ் மக்களின் பங்குபற்றலுடன் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். வரும் நாட்களில் மகாவலி அதிகார சபையினூடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டு மாகாண திணைக்களங்களூடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

GPS தொழில் நுட்பத்தை பயன்படுத்தி 2009 இன் பின்னர் வர்த்தமானி பிரசுரம் செய்யப்பட்ட ஒதுக்கக் காடுகள் தொடர்பான எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

வனஜீவராசிகள் திணைக்களத்தால் 2009ஆம் வர்த்தமானி பிரசுரம் செய்யப்பட்ட தேசிய பூங்கா மற்றும் இயற்கை இடங்கள் மக்களின் குடியிருப்பு, வாழ்வாதாரம் என்பவற்றுடன் தொடர்புடையது. ஆகையால் இவற்றுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் மக்கள் குடியிருப்புக்கள், கலாசாரம், வாழ்வாதாரம் என்பன பாதிக்கப்படா வண்ணம் அனுசரணை ஒன்று உடன் வெளி யிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நியாயபூர்வ கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் செவிசாய்க்க தவறும் பட்சத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசிற்கு வழங்கும் ஆதரவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (9-281)




## உயிலங்குளம் வீதி புனரமைக்கப்பட்டால் மாத்திரமே குளத்தை புனரமைக்கமுடியும்

### கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் உயிலங்குளம் பிரதான வீதியைப்புனரமைப்பதில் ஏற்படுகின்ற தாமதத்தினால் குளத்தின் அணைக்கட்டினை புனரமைக்க முடியாதிருப்பதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு துணுக்காய் கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள அதிகளவான விவசாயிகளைக் கொண்ட உயிலங்குளம் கடந்த 2018ம்ஆண்டு மேமாதம் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக குளத்தின் அணைக்கட்டு சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்பட்டபோது இராணுவத்தினர் மற்றும் பிரதேச விவசாயிகள் ஒன்றிணைந்து குளத்தின் அணைக் கட்டினை தற்காலிகமாக புனரமைப்புச் செய்தனர்.

மேற்படி குளத்தை முழுமையாக புனரமைக்க வேண்டுமென விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவருகின்ற நிலையில் இதுவரை மேற்படி குளமானது புனரமைக்கப்படவில்லை.

இதற்காக பல்வேறு நிதியீட்டங்கள் மூலம் நிதிகள் கிடைக்கப் பெற்றாலும் அதனைப் புனரமைக்கவில்லை என்றும் இதனால் குளம் எதிர்காலத்தில் உடைப்பெடுக்கும் அபாய நிலைய காணப்படுவதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குளத்தை புனரமைப்பதற்கு உரிய மதிப்பீடுகள் செய்யப்பட்டு நிதிகளும் கிடைக்கப்பெற்றன.

ஆனால், துணுக்காயிலிருந்து தென்னியன்குளம் கோட்டைகட்டி, அக்கராயன் வரை செல்கின்ற பிரதான வீதியானது இக்குளத்தின் அணைக்கட்டுப் பகுதியே பயன்படுத்தப்படுகின்றது.

குளத்தினைப் புனரமைக்கும் போது மேற்படி குளத்தின் அணைக்கட்டு போக்குவரத்துப்பாதையாக பயன்படுத்தி அதன் மூலம் கனரக வாகனங்கள் செல்லுமாக இருந்தால் குளத்தின் அணைக்கட்டு பாதிப்படையும், வீதி அபிவிருத்தி திணைக்களமானது அணைக்கட்டுக்கு கீழாகவுள்ள மேற்படி வீதியை புனரமைத்து போக்கு வரத்துக்களுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அவ்வாறு புனரமைக்கப்பட்டதன் பின்னரே தான் குளத்தை புனரமைக்க முடியும் என்று மேற்படி திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

## வாக்களிப்பு தொடர்பான கலந்துரையாடல்



(நெளுக்குளம்)

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (பவ்ரல்) ஏற்பாட்டில் நல்லாட்சி மற்றும் வாக்களிப்பு பற்றிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

"பவ்ரல்" அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் சிறிதரன் தலைமையில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில், வன்னி தேர்தல் மாவட்டத்தினை சேர்ந்த விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொது அமைப்பினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்டிருந்த சிரேஷ்ட சட்டதரணி கந்தசாமி தயாபரன் குறித்த விடயம் தொடர்பாக கருத்துரைகளை வழங்கியிருந்தார்.(9-299)

## பெரமுன கட்சி அலுவலகம் கிளிநொச்சியில் திறப்பு



(கிளிநொச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அலுவலகம் நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி கரடிபோக்கு சந்தியில் அமைந்துள்ள குறித்த அலுவலகத்தை நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே திறந்து வைத்தார். குறித்த நிகழ்வில் பொதுஜன பெரமுன கட்சியின் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், அமைப்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9)

## சர்வ மதக் குழுவினர் சந்திப்பு





(குருமன்காடு)

வவுனியாவில் சர்வமதக் குழுவினரின் கலந்துரையாடல் ஒன்று வவுனியா, இரண்டாம் குறுக்கு தெருவில் உள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இதன்போது, உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து சர்வ மதக் குழுவால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரை யாடப்பட்டதுடன், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் அரச அதிகாரிகள், அரச உத்தி யோகத்தர்கள் ஆகியோருடன் மத நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டு அவர்களினூடாக மத நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில், இலங்கை தேசிய சமாதான பேரவையின் செயற்றிட்ட முகாமையாளர் சமன் செனவிரட்ன, வளவாளர் ரசிகா செனவிரட்ன, உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், மதகுருமார்கள், சர்வமதக் குழுவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)

## மன்.மறைசாட்சிகளின் 475 ஆவது ஆண்டு நிறைவு விழா



(மன்னார்)

மன்னார் மறைசாட்சிகளின் 475ஆவது ஆண்டு நிறைவு விழா தோட்டவெளி வேத சாட்சிகளின் இராக்கினி திருத்தலத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் திருப் பீடத்தின் இலங்கைக்கான திருத் தூதுவர் பேராயர் கலா நிதி பீற்றர் நியான் வன்ரெட் மற்றும் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

475 ஆவது ஆண்டு நிறைவு விழா திருப்பீடத்தின் கோரிக்கைக்கு அமைவாக மன்னாரில் 1544 ஆம் ஆண்டு கத்தோலிக்க விசுவாசத்திற்காக இன்னுயிர் ஈர்ந்த மக்களை நினைவு கூர்ந்து அவர்களை கத்தோலிக்க திரு அவையின் மரபுக்கேற்ப புனிதர்களாக உயர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

இதன் போது திருகோணமலை ஓய்வு பெற்ற ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, மறை மாவட்டங்களை சேர்ந்த குரு முதல்வர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள் உட்பட பல பொது மக்கள் பலரும்கலந்து கொண்டனர். (9-285)

# ஞானசார தேரரைக் கல்லுடன் கட்டி கடலில் போடுங்கள்-சிவமோகன் எம்.பி

(அக்கராயன்)

பல்லின மக்கள் வாழும் இலங்கைத்தீவில் ஞானசார தேரர் போன்ற இனவாதப் விஷக்கிருமிகளை வைக்கக்கூடாது. அது ஒட்டு மாத்த நாட்டையே அழித்து விடும். ஆகவே தமிழ் சிங்கள மக்களுடன் சேர்ந்து அனைவரும் ஒருமித்து நாட்டின் எதிர்கால நன்மை கருதி ஞானசார தேரரை கடலில் போட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மதத் துறவியருக்கு தனிச் சட்டங்கள் ஏதேனும் இயற்றப்பட்டுள்ளதா? எதற்காக நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் அட்டூழியம் செய்த ஞானசார தேரர் உட்பட பிக்குகளை கைது செய்யவில்லை. அறிவிலியான ஞானசார தேரர் கூறும் இலங்கை சிங்கள பௌத்த கொள்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. அதை தெற்கு மக்கள் ஏற்றுக் கொள்வார்கள். வடக்கு கிழக்கு தாயக மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். அதை ஏற்க வேண் டிய எந்த அவசியமும் தமிழர்களுக்கு இல்லை. தெற்கில் குடியிருக்கும் போதே பிசாசு போல் இனவாத ஆட்டம் போடும் ஞானசார தேரர் வடக்கில் குடியேறி மீண்டும் ஒரு இனக் கலவரத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறாரா? ஞானசார தேரர் உண்மையான தீட்சை பெற்ற பௌத்த துறவியா என்னும் சந்தேகம் எழுகிறது. ஏனெனில் புத்த பகவானின் பஞ்சசீலக் கொள்கையை கடைப்பிடிக்கும் எவரும் இப்படி கீழ்த்தரமான செயலில் ஈடுபட மாட்டார்கள்

ஏனெனில் அண்மையில் வவுனியா கல்குனா மடுவில் புத்த விகாரை உள்ளே ஒரு விநாயகர் ஆலயம் அமைப்பதற்கு எனது ஒதுக்கீட்டில் இருந்து நிதி வழங்கப்பட்டது. அவர்கள் பௌத்தர்களா அல்லது ஞானசார தேரர் பௌத்தரா? அதனால்தான் கூறுகிறேன் இலங்கை இன முறுகலில் இருந்து விடுபட வேண்டுமானால் உடனடியாக ஞானசார தேரரை கல்லுடன் கட்டி கடலில் போடுங்கள் என மேலும் தெரிவித்தார். (9-350)

# இணைய தொழில்நுட்ப மாநாடு



(குருமன்காடு)

வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள தனியார் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் இணைய தொழில்நுட்ப மாநாடு நேற்றுக்காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை இடம்பெற்றது.

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளான ம.விக்னராஜ், க.ஹட்சனா மற்றும் அசிஸ்ரியா நிறுவனத்தின் பணிப்பாளர் ப.லதீப் ஆகியோர் வளவாளராக கலந்து கொண்டு இணையத்தின் பயன்பாடும் அதில் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் பங்கும், இணையத்தில் எவ்வாறு கோப்புகள், மென்பொருட்களை இலகுவாக சேமித்து செயற்படுத்துவது, இணையம் மூலம் எவ்வாறு இலாபம் ஈட்டுவது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் தொழில்நுட்ப ஆர்வலர்கள், மென்பொருள் வடிவமைப்பாளர்கள், தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் என நூற்றுக்கு மேற்பட்ட துறைசார்ந்த வல்லுநர்கள் கலந்து கொண்டிருந்தனர். (9-250)

# ஆலயங்களை அமைத்துக் கொடுத்த பெண்



(அக்கராயன்)

ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வசித்து வரும் இராஜேந்திரம் துவாரகா எனும் பெண் மீள்குடியேற்றத்தின் பின்னர் ஊற்றுப்புலம் கிராமத்தின் பாடசாலை உட்பட மாணவர்களின் கல்விக்கான உதவிகளை செய்து வந்த நிலையில் அங்குள்ள மக்களின் நிலைமைகளை அவதானித்து சில வருடங்களுக்கு முன் கிராமத்தில் வசிக்கும் கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டுக்காக மாதா தேவாலயம் ஒன்றை அமைத்து கொடுத்துள்ளார்.

அதன் பின்னர் அக் கிராமத்தில் முத்துமாரியம்மன் ஆலயத்தை அமைத்துக் கொடுத்துள்ளார். அதற்கான கும்பாபிஷேகம் கடந்தவாரம் இடம் பெற்றது. வழிபாட்டுத்தலங்களை அமைத்துக் கொடுத்த குறித்த பெண்ணிற்கு ஊர்மக்கள் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர். (9-350)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்தாய்வு கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பங்கேற்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - குமுழமுனைப் பகுதியில், நேற்று பொதுமக்களைச் சந்தித்த கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் உட்பட்ட குழுவினர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்தாய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

மேலும் கரைதுறைப் பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நிலவும் மக்களின் குறைபாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தனர்.

குறிப்பாக பிரதேசத்தில் நிலவும் காணி அபகரிப்புகள், சட்டவிரோத மற்றும் வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறீஸ்கந்தராசா, சி.சிவமோகன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன் மற்றும் ப.சத்தியலிங்கம், கே.சயந்தன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், ம.தொம்மைப்பிள்ளை, வை.கெங்காதரன், கி.சிவலிங்கம் ஆகியோருடன் பிரதேசத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (9-281)




# பொது மண்டபத்தை திறக்க முடிவு

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் மேற்கு அபிவிருத்தித் தொடர்பான கூட்டம் கடந்த வாரம் அக்கராயன் கிராம அலுவலர் ப.சபாரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது மண்டபத்தினைத் திறத்தல், புனரமைக்கப்பட்டுள்ள பொதுக் கிணற்றினை சிறப்பாகப் பயன்படுத்துதல், மழை காலத்தில் மர நடுகை மேற்கொள்ளுதல் எனப் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதுடன் பொது மண்டபத்தினை விரைவாகத் திறந்து வைப்பது என கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச செயலகத்தினால் பத்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள பொது மண்டபம் இரு ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் பயன்பாட்டிற்குட்படாமல் இருப்பதன் காரணமாக விரைவில் மண்டபத்தினைத் திறந்து வைப்பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (9-350)

# மாணவர்களுக்கான விழிப்புணர்வு



(மன்னார்)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமூக வலைத்தளங்கள் தொடர்பாகவும் உள ஆரோக்கியம் சம்பந்தமாகவும் அண்மைக் காலமாக நாட்டில் இடம்பெறும் முரண்பாடுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தும் விசேட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (MSEDO) ஏற்பாட்டில் மன்/லூ சியா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பாடசாலையிலும் வீடுகளிலும் எதிர் கொள்ளும் உள நலம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாகவும் இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் குறித்த விழிப்பு ணர்வு கருத தமர்வில் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் போதைப் பொருள் பாவனை மற்றும் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களால் நாடகங்கள் மற்றும் பேச்சுக்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதில் பொலிஸார் அசமந்தம்-கிராமத்தை விட்டு வெளியேறும் குடும்பங்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வடகாடு கிராமத்தில் இருந்து இதுவரை நான்கு குடும்பங்கள் வெளியேறியுள்ளன. கிராமத்தில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தியினால் ஏற்பட்டுள்ள சமூக சீர்கேடு காரணமாகவே குறித்த நான்கு குடும்பங்களும் கிராமத்தில் இருந்து வெளியேறி உள்ளன. கடந்த மாதம் 4 ஆம் திகதி மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடகாடு கிராமத்தில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தியினால் சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாகவும் குடும்பங்கள் கிராமத்தில் இருந்து வெளியேறயுள்ளதாகவும் கிராமத்தினைக் பாதுகாப்பதற்கு மாங்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. கூட்டம் நடைபெற்று நாற்பத்தைந்து நாட்கள் கடந்த நிலையிலும் மாங்குளம் பொலிஸார் வடகாடு கிராமத்திற்குச் செல்லவுமில்லை. மக்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டங்களையும் நடத்தவுமில்லை. இந்நிலையில் சமூக வன்முறையினால் பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்கள் கிராமத்தில் இருந்து வெளியேறியுள்ளன. மாந்தை கிழக்கில் அதிகரித்துக் காணப்படும் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அடிக்கடி பிரதேச செயலாளரிடம் பொது மக்களினால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. பொலிஸார் மீது பொது மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். ஏனெனில் பொலிஸாருக்கு வழங்கப்படுகின்ற தகவல்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு சென்றடைவதன் காரணமாக சமூக வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு பொலிஸாரின் ஆதரவு இருப்பதாக மாந்தை கிழக்கு பொது அமைப்புகளினால் குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக தெரிவிக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்கள் மாந்தை கிழக்கில் காணப்படும் நிலையில் மாங்குளம் பொலிஸார் கிராமங்களில் நடைபெறுகின்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் அசண்டயீனமாக இருப்பதாக பொது மக்களினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (9-350)

# பாரதம்

## உத்தர பிரதேசத்தில் கனமழை உயிரிழப்பு 80 ஆக அதிகரிப்பு



(உத்தரப் பிரதேசம்)

உத்தரப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்யும் கனமழையால் இரு நாட்களில் 80 பேர் உயிரிழந்தனர்.

மழையால் ஏற்பட்ட கட்டட இடிபாடுகள், வெள்ளம் ஆகிய அனர்த்தங்களில் சிக்கியே இவர்கள் உயிரிழந்தனர்.

உத்தரப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. (ஐ-2)

## அணுவாயுத நாடுகள் மோதும்போது விளைவுகள் கடுமையானதாகவிருக்கும்

### மீண்டும் இம்ரான்கான் எச்சரிக்கை



(ஜெனீவா)

காஷ்மீரில் இந்தியா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் காரணமாக யுத்தமொன்று மூளக்கூடும் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் உரையாற்றுகையில் இம்ரான் கான் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

காஷ்மீரில் தற்போது காணப்படும் நிலைமையை ஐ.நாவிற்கான ஒரு சவால் என வர்ணித்துள்ள இம்ரான்கான் இந்தியா-பாகிஸ்தான் இடையிலான மோதலின் தாக்கம் எல்லைக்கு அப்பால் நெடுந்தூரம் வரை எதிரொலிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் நடவடிக்கைகள் காஷ்மீர் மக்களை தீவிரவாதமயப் படுத்தும் என எச்சரிக்கை விடுத்துள்ள இம்ரான்கான் இந்தியாவின் நடவடிக்கைகளால் பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரிக்கும் ஆபத்தும் உள்ளது என சுட்டிக் கட்டினார்.

மரபு வழி யுத்தம் ஆரம்பித்தால் எதுவும் நடக்கலாம் எனத் தெரிவித்துள்ள இம்ரான்கான் தனது அயல்நாட்டை விட ஏழு மடங்கு சிறியதான நாட்டிற்கு இரண்டு தெரிவுகளே உள்ளன. ஒன்று சரணடைவது அல்லது இறுதிவரை போராடுவது. நாங்கள் இறுதி வரை போராடுவோம் எனவும் அணுவாயுத நாடுகள் இறுதிவரை மோதும்போது அதன் விளைவுகள் எல்லைக்கு அப்பால் வெகு தொலைவு வரை காணப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-2)

## அமெ.இராணுவத்தினர் அதிரடித் தாக்குதல் 17 ஐ.எஸ்.பயங்கரவாதிகள் உயிரிழப்பு



(டிரிபோலி)

லிபிய நாட்டில் அமெரிக்க இராணுவத்தினர் நடத்திய வான் வழி தாக்குதலில் 17 ஐ.எஸ் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

லிபியாவில் 2011ஆம் ஆண்டு கிளர்ச்சியின்போது, முக்கிய அரசியல் தலைவரும், முன்னாள் லிபிய ஜனாதிபதியுமான முவம்மர் கடாபி கொல்லப்பட்டார். கடாபியின் மறைவுக்குப் பிறகு லிபியாவில் ஐ.எஸ். அமைப்பு அங்கு வலுவாக காலூன்றியது. அதன் பின்பு பல ஆண்டுகளாக பயங்கரவாதிகள் பொதுமக்கள் மீது தாக்குதல் சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்நிலையில் லிபிய அரச படைகளுடன் இணைந்து அமெரிக்க இராணுவத்தின் ஆபிரிக்க கமாண்டிங் குழு நடத்திய வான்வழித்தாக்குதலில் 17 ஐ.எஸ் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். (ஐ-2)

## லொறி-பேருந்து

## 40 பேர் பரிதாபம

### 36 பேர் படுகாயம்

(பீஜிங்)

**சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் லொறி மீது பேருந்து மோதிய விபத்தில் 40 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

சீன நாட்டின் கிழக்குப் பகுதி யில் அமைந்துள்ள ஜியாங்சு மாகாண

## அமெரிக்க தடை கச்சா எண்ணெய்

### ஜனாதிபதி எர்டே



(அங்காரா)

அமெரிக்க தடையையும் மீறி ஈரானிடமிருந்து கச்சா எண்ணெயை துருக்கி தொடர்ந்தும் வாங்கும் என்றும் ஈரானுடன் உறவை முறித்துக் கொள்வது என்பது எங்களால் முடியாத ஒன்று என்றும் ஜனாதிபதி எர்டோகன் அறிவித்தார்.

நேற்று முன்தினம் ஊடகச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு அறிவித்தார்.

எனினும் அமெரிக்க அச்சுறுத்தல் காரணமாக தனியார் நிறுவனங்கள் ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க அஞ்சுவதாகவும் எர்டோகன் சுட்டிக்காட்டினார்.

## 2.5 தொன் கஞ்சா பொலிஸாரால் பறிமுதல்; கஞ்சா கும்பல் தலைவர்களுக்குச் சிறை



(ரங்கூன்)

தெற்கு வேல்ஸ் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் 6 மில்லியன் பவுண்ஸ் மதிப்புள்ள 2.5 தொன் கஞ்சாவை பொலிஸார் பறிமுதல் செய்ததுடன் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட வியட்நாமிய குற்றக்கும்பலின் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

2017 ஆம் ஆண்டு தெற்கு வேல்ஸ் பிராந்தியத்திலும் அதற்கு வெளியிலும் பல கஞ்சா தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கைதான 21 பேருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

குற்றவாளிகளில் ஒருவர் ஆரம்பத்தில் தனது வயது 14 என்று கூறிக் கொண்டார். ஆனால் உண்மையில் அவருடைய வயது 26 என்பதை பொலிஸார் நிரூபித்தனர்.

இந்தக் கஞ்சா கும்பல் தலைவர்களுக்கு மேர்திர் ரிட்ஃபில் கிரவுன் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறைத் தண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# வெளிநாடு

## மோதி விபத்து
## ாக உயிரிழப்பு !

த்தில் பேருந்து ஒன்றில் 70க்கு மேற்பட்டோர் பயணம் செய்தனர். திடீரென சில்லில் காற்று இறங்கியதால் பேருந்து கட்டுப்பாட்டை இழந்ததில் எதிரே வந்த லொறி மீது வேகமாக மோதியது.

இந்த விபத்தில் 40 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாகப் பலியாகினர். மேலும் 36 பேர் படுகாயம் அடைந்தனர்.


தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற மீட்புப் படையினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர் என சின்சுவா செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சீனாவில் போக்குவரத்து விதிமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படுவதில்லை. அதன் காரணமாக வீதி விபத்துகள் பரவலாக ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## அமெரிக்க-வடகொரிய உறவில் விரிசல்

# இருதரப்பு உறவைப் புதுப்பிப்பதற்கு ட்ரம்ப் துணிச்சலான முடிவுக்கு வர வேண்டும்

### வடகொரியா வலியுறுத்து



(பியாங்யாங்)

இருதரப்பு உறவை புதுப்பிக்க ட்ரம்ப் துணிச்சலான முடிவு எடுக்க வேண்டும் என்று வடகொரிய வெளியுறவு கொள்கைகளுக்கான ஆலோசகர் கிம் கே குவான் கோரிக்கை விடுத்தார்.

வடகொரியாவின் எதிர்ப்பை மீறி அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் இராணுவப் படைகள் கொரிய எல்லையில் கூட்டுப்பயிற்சியில் ஈடுபட்டன. இதனால் அமெரிக்கா-வடகொரியா இடையிலான உறவில் மீண்டும் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனை சரி செய்ய இருநாட்டுத் தலைவர்களும் விரைவில் சந்தித்துப் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அணுவாயுதப் பிரச்சினையால் முடங்கியிருக்கும் இருதரப்பு உறவை புதுப்பிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் துணிச்சலான ஒரு முடிவை எடுக்க வேண்டுமென வடகொரியாவின் வெளியுறவுக் கொள்கைகளுக்கான ஆலோசகரும், சிரேஷ்ட தூதரக அதிகாரியுமான கிம் கே குவான் வலியுறுத்தினார். (ஐ-2)

## யை மீறி ஈரானிடம்
## வாங்கும் துருக்கி

### டாகன் அறிவிப்பு

கடந்த சில ஆண்டுகளாகவே அமெரிக்காவின் அச்சுறுத்தலை மீறியும் துருக்கி தொடர்ந்து ஈரானுக்கு தனது ஆதரவை அளித்து வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர், ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் எனவும் அந்த நாட்டுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் கடுமையாக விமர்சித்தார். இதனைத் தொடர்ந்து ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது.

ஆனால், அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன. ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறிய வுடன் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது.

மேலும் அண்மையில் சவுதி எண்ணெய் ஆலை கப்பல் தாக்கப்பட்டதன் பின்னணியில் ஈரான் தான் உள்ளது என்று அமெரிக்கா தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருவது அமெரிக்கா - ஈரான் இடையே மோதல் போக்கை மேலும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# இந்தோனேசியாவைத் தாக்கிய நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 30 ஆக உயர்வு

### 150 இற்கு மேற்பட்டோர் படுகாயம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சேரம் தீவை தாக்கிய 6.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்துக்கு பலியானோர் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது.

இந்தோனேசியாவில் கடந்த புதன்கிழமை காலை தொடர் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்து வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் தஞ்சம் அடைந்தனர். இந்த நிலநடுக்கத்தில் 20 பேர் பலியானதாக முதல் கட்ட தகவல் வெளியானது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் பலியானோர் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளதாகவும் 150 இற்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் பேரிடர் மீட்பு படை உயரதிகாரிகள் நேற்று தெரிவித்தனர். (ஐ-2)

# முதல்தடவையாக சுற்றுலா விசா வழங்கச் சவுதி அரசு தீர்மானம்

### கட்டுப்பாடுகளும் தளர்வு

(ரியாத்)

முதன்முறையாக சுற்றுலா விசா வழங்கத் தீர்மானித்துள்ளதாக சவுதி அரசாங்கம் அறிவித்தது.

விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்க வருபவர்களுக்கு கடந்த ஆண்டு முதல் சவுதி அரசாங்கம் விசா வழங்கி வருகின்றது.

இதைத் தொடர்ந்து தற்போது சுற்றுலா விசா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. தொலைநோக்குப் பார்வை 2030 திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய 49 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இவ்வாறு சுற்றுலா விசா வழங்கப்படும் என்றும் இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என்றும் சவுதி அரேபிய சுற்றுலாத்துறைத் தலைவர் அஹ்மத் அல்-ஹத்தீப் தெரிவித்துள்ளார்.

உடலை முழுமையாக மறைக்கும் வகையில் பர்தா போன்ற ஆடை அணிய வேண்டும் என்ற ஆடைக்கட்டுப்பாடு வெளிநாட்டுப் பெண்களுக்கு தளர்த்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-2)

# நூற்றுக்கணக்கான சவுதி அரேபிய படையினரை உயிருடன் பிடித்துள்ள ஏமன் கிளர்ச்சியாளர்கள்

(சனா)

சவுதி அரேபியாவின் எல்லைப் புறநகர் ஒன்றின் மீது தாக்குதலை மேற்கொண்டு அதிகாரிகள் உட்பட பெருமளவு சவுதி அரேபிய படையினரை உயிருடன் கைது செய்துள்ளதாக ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அறிவித்தனர்.

சவுதி அரேபியாவின் நஜ்ரான் பிராந்தியத்தின் எல்லை நகரின் மீது தாக்குதலை மேற்கொண்ட படையினரையும் பெருமளவு இராணுவ வாகனங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவித்தனர்.



சவுதி அரேபியாவின் இராணுவத்தினருக்கு எதிராக மேற்கொண்ட இந்த தாக்குதலில் ஆளில்லா விமானங்கள் ஏவுகணைகள், விமான எதிர்ப்பு ஏவுகணைகள் என்பவற்றை பயன்படுத்தியுள்ளதாக ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# அபிவிருத்திக்கு ஊழல்தான் தடை!

## கர்தினால் கவலை

**(கொழும்பு)**

**ஊழல் அதிகரித்துக் காணப்படுகின்றமையாலேயே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கவலையுடன் தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆண்டகை மேலும் தெரிவிக்கையில், "சிறு முதலாளிகள் முதல் உயர் இடங்களில் உள்ளவர்கள் வரை ஊழல் பாதையிலேயே பயணிக்கின்றனர். இதற்கு எதிராகச் செயற்படாவிடின் இலங்கையை முன்னேற்றப் பாதையின் கீழ் கொண்டு செல்ல முடியாது. நாம் எவ்வளவு கூறினாலும், மீண்டும் மீண்டும் செய்யக்கூடாத விடயங்களையே செய்கின்றனர்.

முதுகெலும்பு இல்லை என்று நான் ஏற்கனவே கூறியுள்ளேன். மேலும், மத வாழ்க்கையை வாழ்வதன் முக்கியத்துவத்தை நம் மக்கள் மறந்து விட்டார்கள். நாம் சமுதாயத்தை சுத்தம் செய்ய வேண்டும். ஒரு சிந்தனை புரட்சி தேவை.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களின் போது, இறந்த உடல்களுடன் கத்தோலிக்க தேவாலயங்களை முதன்முதலில் பார்வையிட்டபோது அதிர்ச்சியடைந்தேன்.

எனது மதக் கடமைகளை முறையாக நிறைவேற்றாதமையால் தான், இந்த நிலைமை ஏற்பட்டது என என்னை நானே குற்றம் சாட்டிக்கொண்டேன்" எனக் கர்தினால் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஏழு யானைகள் மர்ம மரணம்! வனப்பகுதியில் விசேட தேடுதல்

(ஹபரண)



ஹபரண, திகம்பதஹ, ஹிரிவடுன்ன வனப் பகுதியில் நேற்று விசேட தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார இதனைத் தெரிவித்தார்.

ஹிரிவடுன்ன, தும்பிக்குளம் வனப்பகுதியின் சில பகுதிகளில் உயிரிழந்த நிலையில் யானைகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. நேற்று முன்தினம் மாலை வரை 7 யானைகளின் சடலங்கள் இவ்வாறு கண்டெடுக்கப்பட்டன.

உடலில் விசம் கலந்தமை காரணமாக யானைகள் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார தெரிவித்தார்.

அத்துடன், உயிரிழந்த யானைகளின் உடற்பாகங்கள் சோதனைக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே நேற்றுக் காலை முதல் ஹிரிவடுன்ன வனப் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# வயிற்றிலிருந்து 52 போதை மாத்திரைகள் மீட்பு! டோகாவிலிருந்து இலங்கை வந்த பெண் கைது

(கொழும்பு)



டோகாவிலிருந்து இலங்கை வந்த பிரேஸில் நாட்டுப் பெண் ஒருவர் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

குறித்த பெண் 52 கொக்கெய்ன் மாத்திரைகளை விழுங்கிய நிலையில் நாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த குற்றச்சாட்டுக்கு அமையவே கைதுசெய்யப்பட்டார். குறித்த பெண் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், வைத்தியர்கள் அவரின் வயிற்றிலிருந்து 52 கொக்கெய்ன் மாத்திரைகளையும் மீட்டனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எறும்பின் கர்வம்!

ஒரு சமயம் இந்த உலகத்தில் உள்ள எறும்பு எல்லாம் சேர்ந்து ஒரு மகாநாடு நடத்தியதாம்! அகில உலக எறும்புகள் மகாநாடு! அதில் ஒரு எறும்புத் தொண்டர் பேசுகிறார்! "எறும்புச் சகோதரர்களே! சகோதரிகளே! இந்த உலகத்தில் நமக்குப் பெரிய எதிரி எது என்றால் அது யானைதான்! நாங்கள் எல்லோரும் சேர்ந்து கூட்டமாக எங்கேயாவது போய்க்கொண்டிருப்போம். அப்போது திடீர் என்று ஒரு யானை வந்து நம் மேல் காலை வைக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். என்ன ஆகும்? ஆயிரக்கணக்கான நமது தோழர்கள் இறந்துபோகிறோம்! இதைத் தடுப்பதற்கு என்ன வழி என்பதைப் பற்றி நாங்கள் யோசிக்கவேண்டும்" என்றார்.

அடுத்தபடியாக ஒரு எறும்பு பிரதிநிதி பேச வந்தார். "நாம் எல்லாம் சேர்ந்து நமது எதிரியான யானையைக் கொல்வதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிக்கவேண்டும்!" என்று சொல்லிவிட்டு அமர்ந்தார். பின்னர் அந்த எறும்பு எல்லாம் பல குழுக்களாய்ப் பிரிந்து ஆலோசனை செய்தார்கள். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள். அது எப்படி என்றால் அவர்களுக்குள்ளே ஒரு அகில உலகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது. அந்தத் தலைவர் கடவுளை வேண்டித் தவம் செய்வது, கடவுள் வந்ததும் அவரிடம் ஒரு வரம் வாங்கிவிடுவது. அதாவது நாங்கள் யானைகளைக் கடித்தால் அது இறக்க வேண்டும் என்பது தான் வரம்!

இதுதான் அவர்கள் முடிவு! உடனே மகாநாட்டில் அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது! எல்லா எறும்பும் சேர்ந்து ஒரு தேர்தலை நடத்தினார்கள். ஏகப்பட்ட போட்டிக்கு நடுவில் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவராக ஆன உடனே அந்த எறும்புக்கு ஆணவம் வந்துவிட்டது.

"எறும்புகளே! உங்களின் ஒரே தலைவன் நான்... கடவுளிடம் வரம் வாங்கிக்கொடுக்க வேண்டியது என் கடமை... எப்பேற்பட்ட வரம் வாங்கப்போகின்றேன் என்பதைக் கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள்!" என்றது. நீண்ட காலம் தவம் இருந்தது! அந்தத் தலைவர் எறும்பு. ஒரு நாள் கடவுள் காட்சி கொடுத்தார். "எறும்பே... உன் தவத்தை மெச்சினேன்... என்ன வேண்டும் கேள்!" என்றார். உடனே அந்த எறும்பு "வேறு ஒன்றுமில்லை... நான் கடித்தால் இறக்கவேண்டும்! அவ்வளவுதான்!" என்றது.

"சரி! தந்தேன்!" என்று சொல்லிவிட்டார் கடவுள். வரம் வாங்கியாச்சு. இந்த எறும்புக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. இருந்தாலும் வாங்கிய வரம் பலிக்கிறதா என்று பரிசோதனை செய்து பார்க்க வேண்டுமே! என்ன செய்வது... யாரைக் கடிக்கலாம் என்று யோசனை செய்தது. எதிரில் வரம் கொடுத்த கடவுள்தான் நின்று கொண்டிருந்தார். "அதுதான் வரம் வாங்கியாச்சே... இனி இவர் எதற்கு" என்று யோசனை செய்தது... உடனே அவரையே ஒரு கடி கடித்தது!

அவர் உடனே "பட்" என்று கையாலே ஒரு தட்டு தட்டினார். எறும்பு "அப்பாடா" என்று கத்திக்கொண்டே சுருண்டு விழுந்துவிட்டது. வலி தாங்கவில்லை... "என்ன இது? வரம் பலிக்கவில்லையே... நீங்கள் இறக்க வேண்டாமா? இப்போது நான் அல்லவா இறந்துவிடுவேன் போல் இருக்கிறது?" என்றது எறும்பு தரையில் கிடந்தபடியே.

கடவுள் சிரித்துக்கொண்டே சொன்னார். "நீ என்ன வரம் கேட்டாய்? நான் கடித்தால் இறக்க வேண்டும் என்று வரம் கேட்டாய்! கொடுத்துவிட்டேன்! இப்போது நீ கடித்தாய்! இறக்கப் போகிறாய்!" என்றார். இந்த எறும்பு எப்படி வரம் கேட்டிருக்க வேண்டும்? "நான் கடித்தால் நான் யாரைக் கடிக்கிறேனோ அவர்கள் இறக்கவேண்டும்" என்று அல்லவா கேட்டிருக்க வேண்டும். ஏன் அது அப்படி கேட்கவில்லை தெரியுமா? ஆணவம்! ஆணவம்வந்தால் அறிவுமழுங்கிவிடும்! அதனால் அவசரத்தில் அப்படிக் கேட்டுவிட்டு மாட்டிக்கொண்டது. நமக்கும் அப்படித்தான்...

ஆணவம் வந்துவிட்டால்... அறிவு சரியாக வேலை செய்யாது. ஒரு இடத்தில் எறும்புகள் எல்லாம் வரிசையாகப் போய்க் கொண்டு இருந்ததாம்! அந்த வழியாக ஒரு ஆண் யானையும் ஒரு பெண் யானையும் வந்திருக்கிறது! எறும்புகள் குறுக்கே போவதைப் பார்த்ததும் பெண் யானை நின்று விட்டது. ஆண் யானையைப் பார்த்து "நீங்கள் கொஞ்சம் நில்லுங்கள்!" என்றது. "ஏன் நிற்கச் சொல்கிறாய்?" என்று கேட்டது ஆண் யானை.

"பாவம் எறும்புகள்... அது எல்லாம் போகட்டும்... தவறுதலாக நாம் மிதித்துவிடக் கூடாது இல்லையா?" என்றது பெண் யானை. "சரி வா... அந்தப் பக்கமாக விலகிப் போய்விடுவோம்!" என்று சொல்லி ஆண் யானை பெண் யானையை அழைத்துக் கொண்டு வேறு பக்கமாக ஒதுங்கிப் போனது! இதைப் பார்த்துவிட்டு ஊர்ந்து போய்க்கொண்டிருந்த எறும்புகளில் ஒன்று இன்னொரு எறும்பிடம் சொல்லியதாம்.

"பார்த்தியா? நாங்கள் கடித்துவிடுவோம் என்று பயந்து கொண்டு அந்த இரண்டு யானையும் விலகி ஓடிக்கொண்டிருக்கிறது!" என்றதாம்! அதற்கு இன்னொரு எறும்பு, "பாவம் யானைகள் பிழைத்துப் போகட்டும்! விட்டுவிடு!" என்றதாம்!

# பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் அவசியம்

அறிமுகம்

தற்கால உலகில் அபிவிருத்தியின் வீச்சானது பேண்தகு தன்மையுடையதாக இல்லையென்பதை சமூக ஆர்வலர்களும் பொருளியல் நிபுணர்களும் சுட்டிக் காட்டுகின்றனர். அதேவேளை உலக நாடுகளிடையே வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக அருமையாக இருப்பதுடன் தேவைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இதற்கு பேண்தகு அபிவிருத்தியே ஒரே முடிவாக இருக்க முடியுமென்பதால் ஒவ்வொரு நாடும் தமக்கான சவால்களை வெற்றி கொள்வதற்காக தேசிய திட்டங்களை தயாரித்த வண் ணம் உள்ளன.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் இந்த வேலைத்திட்டத்தினை பாடசாலைக் கட்டமைப்பினுள் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பாடசாலைகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிபர்களது முறையான வழிகாட்டல், ஆசிரியர் குழாத்தினது செயற்பாட்டு ஒத்துழைப்பு மற்றும் பாடசாலைப் பிள்ளைகளது செயற்பாட்டுப் பங்களிப்புடன் பாடசாலைக் கட்ட மைப்பினுள் இவ்வாறு வேலைத் திட்டங்களை மிகச் சிறந்த முறை யில் நடைமுறைப்படுத்தக்கூடிய ஆற்றல் காணப்படுவதாகவும் இவற்றின் பிரதிபலன் தொடர்பில் இறுதி நடுவராகப் பாடசாலைப் பிரதி நிதிகளே பொறுப்புடன் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவது மாத்திரமின்றி ஒவ்வொரு பாடசாலையும் கல்வியினூடாக பண்புத் தரமான மாற்றங்களை மேற்கொள் வதற்குரிய வாய்ப்பாகவும் அதனை பயன்படுத்த முடியும். அதனா லேயே "அழகிய சிறுவர் உலகம்-பேணிப் பாதுகாக்கப்பட்ட எதிர்கா லம்" எனும் தொனிப் பொருளின் கீழ் நாடளாவிய ரீதியில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

நோக்கம்

எமது நாட்டின் எதிர்காலத்தில் தீர்மானமிக்க தரப்பினராக உள்ள பாடசாலைப் பிள்ளைகளை இந்நிகழ்ச்சித் திட்டத்தில் வரிசைப் படுத்தப்பட்டுள்ள செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதனூடாக அவர்கள் சமநிலையான அறிவு, திறமைகள், உளப் பாங்குகளின் பேரில் அர்த்தமான வாழ்க்கை முறைமை மிகை உற்பத்திப் பெருக்கம் என்பன ஏற்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த பாரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய திட்டமிடல்கள் முதன்மையானது. பாடசாலைப் பிள்ளைகளைத் தெளிவூட்டுதல் மற்றும் அவர்களது நடத்தையை மேம்படுத்துதல் இனங்காணப்பட்டு அத்திட்டத்தின் முதற் கட்டமாக ஜனாதிபதி செயலகத்தின் அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டப் பிரிவினரால் நாடு தழுவிய ரீதியில் 3409 பாடசாலைகளில் நிகழ்ச்சித்திட்டங் களை நடத்த திட்டமிடப்பட்டதுடன் வடமாகாணத்தில் 245 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலைப்பிள்ளைகள் ஆபத்துக்குள்ளாவதைத் தவிர்த்து அவர்களை சமூக மாற்றக்காரணிகளாக வலுப்படுத்துதல், நிலப் பயன்பாட்டு முறை தொடர்பான தெளிவை ஏற்படுத்துதல், பாடசாலைத் தோட்டத்தை உற்பத்தி அலகாக மாற்றுதல், வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்து, ரசனையை மேம்படுத்துதல் மற்றும் அறிவாளிகளாக்குதல், ஆரோக்கியமான பாடசாலைச் சூழலை உருவாக்குதல், போதைப் பொருள் தொல்லை, சிறுநீரக நோய் மற்றும் தொற்றா நோய்த் தொல்லை ஆகியவற்றை தடுப்பதற்கான இயங்குநிலைப் பங்காளர்களாக மாற்றுதல் முதலான அம்சங்கள் முதன்மையான நோக்கங்களா கும்.



இவற்றைச் செயற்படுத்துவதற்கு தேவையான உதவிகள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழ ங்க அமைச்சுக்கள், திணைக்க ளங்கள் என 14 அமைச்சுக்க ளின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள் ளன. அவ்வமைச்சுகளின் விப ரம் பின்வருமாறு.

1) கல்வி அமைச்சு.

2) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு.

3) கமத்தொழில் அமைச்சு.

4) சுகாதார, போசாக்கு மற் றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு

5) மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு

6) உள்நாட்டலுவல்கள் அமைச்சு

7)மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

8)நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு.

9)விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு.

10)கிராமிய பொருளாதார அமைச்சு.

11)நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு.

12)காணி அமைச்சு.

13)பாதுகாப்பு அமைச்சு.

14)சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு போன்றனவாகும்.

அமுல்படுத்தப்படவுள்ள தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள்:-

1) உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம்

2) சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம்

3)போதைப்பொருள் தடுப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம்

4)சிறுநீரக நோய்த் தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

5)பிள்ளைகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித் திட்டம்.

தேசிய திட்டங்களின் நடை முறை ஒழுங்கு.(தேசியம்/ மாகாணம்)

ஜனாதிபதி அலுவகம்
கல்வி அமைச்சு.
மாகாண கல்வி அமைச்சு
வலயக் கல்வி அலுவலகம்.
கோட்டக்கல்வி அலுவலகம்.
பாடசாலை.
பாடசாலை மட்டம்
பேண்தகு பாடசாலைக்குழு
அதிபர்
பிரதி அதிபர்
ஆசிரியர்கள் (05 பேர்)
பாசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதி(ஒருவர்)
பழைய மாணவர் (ஒருவர்)
நலன்விரும்பிகள் (இருவர்)
பேண்தகு பாடசாலை மாணவர் குழு
பொறுப்பாசிரியர்.
பேண்தகு மாணவத் தலை வர்.
உபதலைவர்.
செயலாளர்.
உப செயலாளர்.
உறுப்பினர்கள்.
வகுப்பு பிரதிநிதிகள்.

விவசாயக்குழு, சுற்றாடல் பாதுகாப்புக்குழு, போதைப் பொருள் தடுப்புக்குழு, சுகாதாரக் குழு, சிறுவர் பாதுகாப்புக் குழு என 5 குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டு குறித்த பாடத்துறைசார்ந்த பொறுப்பாசிரியரின் வழிநடத்தலில் ஒவ்வொரு குழுவுக்குமான உறுப்பினர்களின் தெரிவு இடம்பெறுவதோடு குறித்த பொறுப்பாசிரியர்களே பாடசாலைக்குழுவி லும் இடம்பெறுவர். அத்துடன் ஒவ்வொரு குழுவும் தமக்குரிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் தனித்தனியாக பாடசாலைக்குழுவுடன் கூடி ஆராய்ந்து தமது செயற்பாட்டுத் திட்டங்கள் தொடர் பான முன்மொழிவை முன்வைத்து வருடாந்த செயற்பாட்டுத் திட்டமிடலை தயாரித்து பாட சாலை விளம்பரப் பலகையில் காட்சிப் படுத்துவர்.

பாடசாலைகளில் நடைமுறைப் படுத்த வேண்டியதன் அவசியம்:-

**1) உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டம்**

எமது நாட்டில் பெரும்பாலான பாடசாலைகளில் நிலவளப் பயன்பாடு இழிவளவான நிலையிலேயே உள்ளது. இதனடிப்படையில் உணவுற்பத்தி தேசிய வேலைத் திட்டத்தினூடாக பாடசாலைகளில் காணப்படும் குறைந்த பயன்பாட்டினைக் கொண்ட நிலத்தினை விவசாய ரீதியில் சூழல் நேயமிக்கதாக அபிவிருத்தி செய்யும் ஆற்றலை இனங்காணவும், சிறந்த விவசாய ஆலோசனை பெற்றுக் கொள்ளவும் வருமானத் தைப் பெறவும் உற்பத்தி அலகு களை விரிவாக்கவும் முடியும்.

மாறாக நிலவளம் குறைந்த , நிலமற்ற நிலையில் உள்ள நக ரப் பாடசாலைகள் தமது பாடசா லைச் சூழலை பசுமைக்குரிய இடமாக மாற்ற முடியும் என்பதற்கான வழிகளைத் தேடுவதற்கு உதவுவதோடு எமது நாடு விவசாய நாடு என்ற வகையில் விவசாயத்தின் மூலம் தன்னிறைவைக் காணவும், நச்சுத்தன் மையற்ற உணவுற்பத்தியினை பிரபல்யப்படுத்தவும் சேதனப் பசளை அலகுகளை உருவாக்க வும் தாவரங்களின் போசாக்குத் தரங்கள் தொடர்பான தெளிவைப் பெறவும் உதவுகின்றது.

அத்துடன் பாசாலைகள் தமது ஐந்தாண்டு திட்டத்தை தயாரிக்கும்போது பாடசாலைக் காணிப் பயன்பாட்டுத் திட்டத்தை பற்றி கலந்துரையாடுவது சிறப்பானதாகும். காணிப் பயன்பாட்டு அலுவலருடன் இணைந்து இத் திட்டத்தைத் தயாரிக்கும் போது எதிர்காலத்தில் அமைக்கப்பட வேண்டிய கட்டடங்கள், வீணான வளச் சேதங்களை இனங்கண்டு கொள்ள முடியும்.

பாடசாலை வீட்டுத்தோட்ட நிகழ்ச்சியின் மூலம் காணிக் கையாளுகைத் திட்டம், பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலத்தை அடையாளம் காணும் திறன், நிலத்தை தயார் செய்யும் ஆற்றல், மண் பாதுகாப்பு தொடர்பான அனுபவ அறிவு, தான் வாழும் பிரதேசம் சார்ந்த கால நிலை மற்றும் மண் வகைகள் தொடர்பான அறிவு, விற்பனைப் பொறிமுறை, சந்தைப்படுத்தல் நுட்பம் தொடர்பான பயிற்சி அனுபவங்களை பெற்றுக் கொள்ள லாம்.

**2) சுற்றாடல் பாதுகாப்பு தேசிய வேலைத்திட்டம்:-**

நாம் எதிர்நோக்கும் சுற்றாடல் பாதுகாப்பு தேசிய வேலைத் திட்டம்

நாம் எதிர்நோக்கும் சுற்றாடல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதென்பது பெரும் சவாலாக மாறியுள்ளது. பாடசாலை பிள்ளைகளை சுற்றாடலில் பற்றுள்ளவர்களாக மாற்றுவதன் மூலம் சூழலை நேசிக்கவும், இயற்கை சூழலுடன் இயைந்த வாழ்வு வாழவும், சுக வாழ்விற்கான குணாம்சங்களை கட்டியெழுப்புவதற்கும் முடியும். புவியியல், குடியியற்கல்வி, வரலாறு போன்ற பாடங்களினால் பெறும் அறிவை நடைமுறை ரீதியில் தாம் வாழும் பிரதேசம் தொடர்பான அறிவு, அங்கு காணப்படும் தாவர இனங்கள், இயற்கை அம்சங்கள், கழிவகற்றல் முகாமைத்துவம், மீள் சுழற்சி பாவனை தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

மனிதன் என்ற வகையில் ஒவ்வொருவரும் தாம் வாழும் சூழல் தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கு பாடசாலைகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக தமது வீடு குடும்பம், சமூகம் என்ற ரீதியில் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்த உத வும்.

**03. போதைப் பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

போதைப் பொருள் பாவனையானது இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமானத்தில் 1/3 பங்கினர் மதுபானத்திற்குப் புகைத்தலுக்கும் செலவழிக்கப்படுகின்றதெனவும், சுகாதாரச்செலவுகளில் 22 வீதத்திற்கும் அதிகமாக நேர டியாக மதுபானம், புகைத்தல் பயன்பாட்டினால் நோயுற்றவர்களுக் காக செலவு செய்யப்படுகின்றதென வும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

போதைப் பொருள், மதுபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் உண்மைத் தன்மையினை தெளிவுபடுத்தி மாணவர்களை போதைப்பொருள் பாவனைக்கு எதிரான தலைவர்க ளாக மாற்றும் நோக்குடன் Youth Against Substance abuse (NASA) என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேலைத்திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

போதைப் பொருள் ஒழிப்புத் தொடர்பில் மாணவர்களை தெளிவுபடுத்தல்,பெற்றோர்களை தெளிவுபடுத்தல், கிராம மட்டத்தில் கிராம சேவகர் ஊடாக கருத்திட்ட ங்களை நடைமுறைப்டுத்தும் போது போதைப் பொருள் பாவனை விற்பனை செய்யப்படும் இடங் கள் இனங்காணப்பட்டு நடவடி க்கை எடுக்கப்படுவதன் மூலம் முழு இலங்கையையும் போதைப் பொருள் அற்ற நாடாக கொண்டு வர முடியும்.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களிடையே கையெழுத்து சஞ்சிகை,அபிப்பிராயப் பெட்டி வைத்தல், சித்திரங்கள் மூலம் மனப்பாங்கில் ஒவ்வொரு மாணவர் மனத்திலும் மாற்றத்தைக் கொண்டு வரலாம்.

**04. சிறு நீரக நோய்த் தடுப்பு தேசிய வேலைத்திட்டம்**

நாட்டின் உயிர் நாடியான பாடசாலைகள் மூலம் சிறந்த சுகா தார பழக்கவழக்கங்களைக் கொண்ட நீடுறுதியான கிராமம் ஒன்றினை உருவாக்குவதற்காக மாணவா களிடையே தொற்று, தொற்றா நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல், காட்சிப் பதாதைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை தயாரித்து வெளியிடல், போதியளவு நீர் அருந்துவதற்கு பிள்ளைகளைப் பழக்கப்படுத்துதல் ,போதியளவு துப்புரவு ஏற்பாட்டு வசதிகளை செய்தல் மூலம் சிறுநீரக நோய்த் தடுப்பு தொடர்பான விடயங்களை அது தொடர்பான செய்திகளை பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் வீட்டுக்கு எடுத்து செல்வதனூடாக மனிதர்களிடத்தில் மாற்றத்தை கொண்டு வரலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது.

**5) பிள்ளைகளைப் பாதுகாப்போம் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

பிள்ளைகள் ஒவ்வொருவ ரும் தனித்துவமானவர்களாகவே வளர்கிறார்கள். அவர்கள் ஏனையவர்களாலும் சூழலினாலும் தமது கால எண்ணங்களையும் உணர்வுகளையும் தீர்மானித்துக் கொள்ளும்படி வழிப்படுத்துகிறார்கள். சிலர் அதிக பெறுமதியுடையவர்களாகத் தங்களை எண்ணிக் கொள்கிறார்கள். தமது நடை, உடை, பாவனை போன்றவற்றால் தாம் அதிக பெறுமதி மிக்கவர்கள் என்பதை வெளிப்படுத்தவும் நிலை நிறுத்தவும் முயன்று கொண்டே இருக்கின்றனர்.

வேறு சிலர் மாறாகத் தம்மை தாமே தாழ்த்தி மதிப்பிட்டுக் கொள்கிறார்கள். இந்தத் தாழ்வான நினைப்புக்களும் அவர்களின் மேலாதிக்கம் செலுத்தி வருகின்றன. அவர்கள் தமது நடை, உடை, பாவனை முறைகளில் அக்கறை கொள்வதில்லை. தமது மதிப்பை தாமே குறைத்துக் கொள்ளும் மாதிரியான சொற்களையும் தொடர்பாடலையும் மேற்கொள்கின்றனர். இதனால் சமூக ரீதியில் தேய்ந்து போகும் மனிதர்களாகி வருகின்றனர். குறிப்பாக வீட்டு வன்முறைகள், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், போசணை மற்றும் சுகா தாரப் பிரச்சினைகள், போதைப் பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான குற்றங்களில் ஈடுபடுதல், சிறுவர் நன்னடத்தைக்கு உட்படுத்தல், அங்கவீனக் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகளினால் தமது நாட்டில் சிறுவர்கள் அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இத்தகைய நிலைமைகளிலிருந்து விடுவித்து உடல்,உள ரீதியான அபிவிருத்திக்கு வழிகோலுதல் அவசியமாகும்.

இதற்கு பாடசாலைகள் தோறும் சிறுவர் நேயமிக்க சேவைகளை வழங்குதல், இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான தெளிவூட் டலை வழங்குதல், வீதி ஒழுங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், உயிர்பாதுகாப்பு, முதலுதவி தொடர்பான ஆற்றல் களை விருத்தி செய்தல்,தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் முறை தொடர்பாக விழிப்பூட் டுதல் முதலான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விபத்துக்கள், அனர்த்த ங்கள் அற்ற பா்சாலை சுற்றாடல் ஒன்றை கட்டியெழுப்ப முடியும்.

முடிவுரை

எனவே எமது நாட்டின் கல்வி அமைச்சு பேண்தகு அபிவிருத்திக்குப் பொருத்தமான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை முன்மொழி ந்து செயற்படுத்தி வரும் நிலை யில் எமது வடமாகாண கல்வி அமைச்சு எமது பிரதேசங்களுக் குப் பொருத்தமான திட்டங்களை இனங்கண்டு தற்போது கல்விச் செயற்பாடுகளிலுள்ள இயலுமை, இயலாமை, சவால்களை எதிர் கொண்டு எதிர்காலத்தில் முன் னெடுக்க வேண்டிய நடவடிக் கைகள் தொடர்பில் ஆராய்தல் பொருத்தமான தாகும்.

ந.திருச்செல்வம்
யா/ ஆவரங்கால்
நடராஜ இராமலிங்க
வித்தியாலயம்

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம் - பகுதி I

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

10

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் 4வது வாசகத்தால் சேர்க்கப்பட்ட அத்தியாயம் XVII A ல் உள்ளடங்கியுள்ள விடயங்களும் அவற்றின் உறுப்புரை இலக்கமும்

| விடயங்கள் | அரசியல் அமைப்பின் உறுப்புரை இல. | உறுப்புரை தமிழ் எழுத்துக்கள் |
|---|---|---|
| மாகாண சபைகளைத் தாபித்தல் | 154A. (1) | A - அ |
| ஆளுநர் | 154B(1) -154B(12) | B - ஆ |
| ஆளுநரின் நிறைவேற்று அதிகாரங்கள் | 154C, 154F | C - இ |
| மாகாண சபையின் உறுப்பினர்கள் | 154D(1) - 154D(2) | D - ஈ |
| பதவிக்காலம் | 154E. | E - உ |
| மாகாண சபை அமைச்சரவை | 154F(1)- 154F (7) | F - ஊ |
| மாகாண சபைகள் நியதிச்சட்டங்களை இயற்றல் | 154G(1) -154G(11) | G - எ |
| நியதிச்சட்டங்களுக்கு ஆளுநரின் ஒப்புதல் | 154H(1) - 154H(4) | H - ஏ |
| பொதுமக்கள் பாதுகாப்பு | 154J(1) - 154J(2) | J - ஐ |
| பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறுகை (மாகாணசபை அல்லது ஆளுநர்) | 154K. | K - ஒ |
| அரசியல் அமைப்பிற்கிணங்க நிருவாகம் செயற்படாமை | 154L(1) - 154L (6) | L - ஓ |
| மாகாண சபையின் தத்துவங்களைப் பாராளுமன்றம் ஜனாதிபதிக்கு அளித்தல் | 154M(1) - 154M(2) | M - க |
| மாகாண சபையின் நிதிசார் உறுதிச் சமநிலையின்மை | 154N(1) -154N(4) | N - ங |
| மாகாணத்தின் மேல் நீதிமன்றம் | 154P(1)- 154P(6) | P - ச |
| மாகாணசபைகளின் பணிகள், தத்துவங்கள் தேர்தல் | 154Q | Q - ட |
| தேசிய நிதி ஆணைக்குழு | 154R(1) - 154R(8) | R - ண |
| மாகாணசபைகள் தமது தத்துவங்களை பிரயோகிக்காமல் இருக்கச் செய்தல் | 154S(1)- 154S(2) | S - த |
| நிலைமாறு கால ஒழுங்குகள் | 154T. | T - ந |

### மாகாண சபையின் நிறைவேற்றதிகாரம் - ஆளுநர் அதிகாரம்

ஆளுநருக்கு மாகாண சபையைக் கூட்டுகின்ற, ஒத்திப்போடுகின்ற, கலைக்கின்ற அதிகாரம் இருக்கின்றது. ஆனால் முதலமைச்சருக்கு பெரும்பான்மை இருக்கின்றபோது அவரது சம்மதமின்றி கலைக்க முடியாது. முதலமைச்சரின் சம்மதமின்றி கலைத்து நீதிமன்றத்தினூடாக மீண்டும் கூட்டப்பட்ட சம்பவங்கள் இருக்கின்றன.

13ஆம் திருத்தம் மாகாணங்களுக்கு ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குகின்றது. சாதாரணமாக ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். ஆனாலும் ஜனாதிபதி விரும்பிய நேரம் நீக்கலாம். அதேநேரம் 2/3 பெரும்பான்மை மூலம் குறித்த காரணங்களுக்காக ஆளுநரை நீக்கும்படி மாகாண சபை கோரலாம். ஜனாதிபதியைப்போன்று ஆளுநருக்கும் மாகாண சபையைக் கூட்டுகின்ற, ஒத்திப்போடுகின்ற, கலைக்கின்ற அதிகாரம் இருக்கின்றது.

ஆனால் முதலமைச்சருக்கு பெரும்பான்மை இருக்கின்றபோது அவரது சம்மதமின்றி கலைக்க முடியாது. முதலமைச்சரின் சம்மதமின்றி கலைத்து நீதிமன்றத்தினூடாக மீண்டும் கூட்டப்பட்ட சம்பவங்கள் இருக்கின்றன. (இது சம்பந்தமான வழக்கை பின்னர் பார்ப்போம்). நிறைவேற்றதிகாரம் ஆளுநருக்குரியது. அவற்றை நேரடியாகவோ அல்லது அமைச்சர்களுக்கூடாகவோ அல்லது அவருக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கூடாகவோ அவர் பாவிக்கலாம். அவ்வதிகாரங்களை அமைச்சரவையின் ஆலோசனையின் பிரகாரம் தான் பாவிக்கலாம். ஆளுநருக்கு கீழ் உள்ள அதிகாரிகள் என்பது மாகாண சபைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண பொதுச் சேவை உறுப்பினரைக் குறிக்கும் மாகாண பொதுச்சேவை ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதன் உறுப்பினரின் நியமனம் இடமாற்றம் பணி நீக்கம், ஒழுக்க நெறிக் கட்டுப்பாடு என்பனவும் ஆளுநரின் பொறுப்பில் உள்ளது. ஆகவே மாகாண சபைக்கு அதன் தீர்மானங்களைச் செயற்படுத்தும் பொதுச் சேவை அதிகாரிகளின் மீது எதுவித மேலாதிக்கமும் கிடையாது. இவ் அதிகாரிகள் ஆளுநரின் வழிகாட்டலுக்குக் கட்டுப்பட்டவர்களாயும் அவருக்கே விசுவாசம் உள்ளவர்களாகவும் இருக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

இதனால் நிறைவேற்றதிகாரமல்லாத, வெறும் றப்பர் ஸ்டாம்பாக இருக்க வேண்டிய விடயங்களில்கூட ஆளுநர் மிகவும் அதிகாரம் பொருந்தியவராகவே இருக்கின்றார். நிறைவேற்றதிகார விடயத்தில் அமைச்சரவையின் ஆலோசனைக்கமைய இயங்க வேண்டும். ஆனால் அரசியலமைப்பில் ஆளுநருக்கு வழங்கப்பட்ட சில தற்துணிவு அதிகாரங்களில் அமைச்சரவையின் ஆலோசனையின்படி இயங்கத் தேவையில்லை என்ற விதிவிலக்கும் இருக்கின்றது. மேலும் ஏதாவது ஒரு விடயத்தில் ஆளுநர் தனது தற்துணிவு அதிகாரத்தை பாவித்திருக்க வேண்டும் என்றோ பாவித்திருக்கக் கூடாது என்றோ அந்த அடிப்படையிலும் நீதிமன்றில் கேள்வி எழுப்புவது தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விடயங்களுடன் (ஆளுநர் அதிகாரங்கள்) சம்பந்தப்பட்ட அரசியலமைப்பு உறுப்புரைகள் கீழே தரப்படுகின்றன.

- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154A** படி எந்த மாகாணத்திற்கு ஒரு மாகாண சபை நிறுவப்பட்டதோ அந்த மாகாணத்திற்கு ஆளுநர் ஒருவர் இருத்தல் வேண்டும். (உறுப்புரை-**154B(1)**)
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154B(2)**. ஆளுநர் ஜனாதிபதியால் அவரது ஆணை மூலம் நியமிக்கப் படுவார். மேலும் அரசியலமைப்பின் உறுப்புரை-**4(B)** இணங்க ஜனாதிபதி யின் விருப்பத்திற்கு அமைய பதவி வகித்தலும் வேண்டும்.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154B(3)**- ஆளுநர் தனது பதவியை இராஜினாமா செய்யலாம்
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154B(4)**- இல் ஜனாதிபதி ஆளுநரை நீக்குதலும் அதற்கான காரணங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. 2/3 பெரும்பான்மை மூலம் குறித்த காரணங்களுக்காக ஆளுநரை நீக்கும்படி மாகாண சபை கோரலாம்.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154B(5)**-. ஆளுநர் ஐந்து வருட காலத்திற்கு பதவியில் இருப்பார்
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154B(8)**- மாகாண சபையைக் கூட்டுமாறு அழைப்பதற்கும், மாகாண சபையைக் கலைப்பதற்கும், மாகாண சபையின் அமர்வை நிறுத்துவதற்கும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. ஆளுநர் இச் செய்கைகளை முதலமைச்சரின் அபிப்பிராயப்படியும் அமைச்சரவை மற்றும் மாகாண சபையின் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றும் செய்யவேண்டும். பெரும்பான்மை முதலமைச்சருக்கு இருக்கின்றபோது அவரது சம்மதமின்றி மாகாண சபையைக் கலைக்க முடியாது.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154B(அ10)**- ஆளுநர் மாகாண சபையொன்றில் உரையாற்றலாம் என்பதுடன் அந் நோக்கத்துக்கென உறுப்பினர்களின் வருகையைத் தேவைப்படுத்தவும் செய்யலாம்.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154B(ஆ10)**- ஆளுநர் சபையிடம் அப்போது முடிவுறாதிருக்கும் நியதிச் சட்டம் தொடர்பாகவோ அல்லது வேறு கருமத்துக்காகவோ அது பற்றி கேட்டு சபைக்கு கடிதத்தினை அனுப்பலாம் என்பதுடன் அக் கடிதம் சபைக்கு கிடைக்கும் போது அதனை சபை கூடிய விரைவில் சீர்தூக்கி பார்க்க வேண்டும்.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154B(11)** (அ) மாகாணத்தின் அலுவல்களது நிர்வாகம் தொடர்பிலான அமைச்சர்கள் சபையின் எல்லா முடிவுகளையும் சட்டவாக்கத்திற்கான உத்தேசங்களையும் மாகாண ஆளுநருக்குத் தெரிவித்தலும் (ஆ) மாகாணத்தின் அலுவல்களது நிர்வாகம் அத்துடன் சட்டவாக்கத்திற்கான உத்தேசங்கள் ஆகியன தொடர்பில் ஆளுநர் கோரக்கூடியவாறான அத்தகைய தகவல்களைக் கொடுத்து உதவுதலும் அத்துடன் (இ) எக் கருமம் பற்றி அமைச்சர் ஒருவரால் முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் சபையினால் அது சீர்தூக்கிப் பார்க்கப்படாதிருக்கின்றதோ அந்த ஏதேனும் கருமம் சீர் தூக்கிப் பார்த்தலுக்கென அமைச்சர்கள் சபைக்கு சமர்ப் பிக்கப்பட வேண்டுமென ஆளுநர் தேவைப்படுத்தினால் அதனை அவ்வாறு சமர்ப்பித்தலும் முதலமைச்சரின் கடமைகளாகும்.

- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154C**- எக் கருமங்கள் தொடர்பில் நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு மாகாண சபைக்கு அதிகாரமுள்ளதோ அக்கருமங்களை உள்ளடக்குவதற்கான/ நடைமுறைப்படுத்துவதற்கான நிறைவேற்று அதிகாரமானது அம் மாகாணத்திற்கான ஆளுநரால் ஒன்றில் நேரடியாக அல்லது அமைச்சரவைச் சேர்ந்த அமைச்சர்கள் மூலம் அல்லது ஆளுநருக்கு கீழுள்ள அலுவலர்கள் மூலம் உறுப்புரை **154F** க்கு அமைவாக செயற்படுத்தப்படல் வேண்டும்.
- 13ஈவது திருத்தத்தில் உறுப்புரை-**154E**- ஒரு மாகாண சபை, முன்னரே கலைக்கப்பட்டாலொழிய அதன் முதல் கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு தொடரும். அந்த ஐந்து ஆண்டுகளும் காலாவதியானதும் கலைப்பொன்றை செயற்படுத்தல்வேண்டும்.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154F(1)**- ஒரு மாகாண ஆளுநருக்கு அவர் தனது செயற்பாடுகளைச் செய்வதில் உதவி செய்வதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் முதலமைச்சருடன் ஒரு அமைச்சர் சபை இருக்க வேண்டும். மேலும் நான்கு அமைச்சர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. ஆளுநர் தனது செயற்பாடுகளைச் செயற்படுத்துவதில், அத்தகைய ஆலோசனைகளுக்கு ஏற்ப செயற்படுவார், அரசியலமைப்பின் கீழ் அல்லது அவரது செயற்பாட்டை அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றை தனது விருப்பப்படி செயற்படுத்துவதற்குத் தேவையானதைத் தவிர.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154F(2)**- ஏதேனும் கருமமானது ஆளுநர் தனது விருப்பப்படி செயற்படத் தேவையான இந்த அரசியலமைப்பின் கீழ் அல்லது கீழ் உள்ள எந்தவொரு விடயமும் இல்லையா என்பது குறித்து ஏதேனும் கேள்வி எழுந்தால், ஆளுநரின் விருப்பப்படி எடுக்கும் முடிவு இறுதி முடிவாக இருக்கும், ஆளுநரின் இந்த இறுதி எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்பட முடியாது. ஏனெனில் ஆளுநரின் விருப்பப்படி செயற்படுவது என்பது அவர் ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களின் படி செயற்படுவதால் ஆகும். அவர் தனது விருப்பப்படி செயற்படக்கூடாது அல்லது செய்யக் கூடாது.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை- **154F(4)**- ஆளுநர் அந்த மாகாணத்திற்காக அமைக்கப்பட்ட மாகாண சபையில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவரை முதலமைச்சராக நியமிப்பார்.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154F(5)**- ஆளுநர் முதலமைச்சரின் ஆலோசனையின்பேரில், அந்த மாகாணத்திற்காக அமைக்கப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களிலிருந்து மற்ற அமைச்சர்களை நியமிப்பார்.
- 13ஆவது திருத்தத்தில் உறுப்புரை-**154F(5)** அமைச்சர்கள் சபை மாகாண சபைக்கு கூட்டாக பொறுப்பு கூறல் மற்றும் பதிலளித்தல் வேண்டும்.

அரசியலமைப்பின் உறுப்புரை **4(b)** தான் ஜனாதிபதிக்கு நிறைவேற்றதிகாரத்தை வழங்குகின்றது. ஜனாதிபதியின் பிரதிநிதியாகவே ஆளுநர் செயற்படுகின்றார். எனவே, அவரது நிறைவேற்றதிகாரம் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்திலிருந்தே பெறப்படுகின்றது. இதனால் ஆளுநர் தற்துணிவு அதிகாரம் என்று எதையாவது செய்தால் அதனைக் கேள்விக்குட்படுத்த, கட்டுப்படுத்த வழி இருக்கவில்லை.

உறுப்புரை **154B(2)** இல் "ஆளுநர் உறுப்புரை **4(b)** பிரகாரமே பதவி வகிக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. **4(b)** தான் ஜனாதிபதிக்கு நிறைவேற்றதிகாரத்தை வழங்குகின்றது.

ஜனாதிபதியின் பிரதிநிதியாகவே ஆளுநர் செயற்படுகின்றார். எனவே அவரது நிறைவேற்றதிகாரம் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்திலிருந்தே பெறப்படுகின்றது.

இதனால் ஆளுநர் தற்துணிவு அதிகாரம் என்று எதையாவது செய்தால் அதனைக் கேள்விக்குட்படுத்த, கட்டுப்படுத்த வழி இருக்கவில்லை.

(தொடரும்...)

# அடிப்படைவாதிகளையும் பிரிவினைவாதிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் சம்பந்தன், சுமந்திரன்

## புலிகளுக்கு ஆதரவான அணி சஜித்திற்காக களமிறக்கம் – பந்துல காட்டம்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் நாடுகடந்த அமைப்பினர் மற்றும் அடிப்படைவாதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஆதரவு அணி சஜித் பிரேமதாஸவுக்காக களமிறங்கியுள்ளதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன குற்றம்சாட்டினார்.**



அத்துடன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சம்பந்தன் ஆகியோர் பிரிவினைவாதிகளையும் அடிப்படைவாதிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் பிரிவினராகச் செயற்பட்டு சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டி -னார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக பல நிபந்தனைகளுக்கு இணங்கியதுடன், பாரிய பிளவுகளுக்கு மத்தியில் சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் 'யானை' சின்னத்தில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பது அந்தக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு கவலைக்குரிய விடயம்.

எந்தக் கட்சியையும் சாராமல் பொது வேட்பாளர்களாக போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரைப் போன்றே கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாஸவுக்கும் அன்னம் சின்னத்திலேயே போட்டியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்து கொள்வதற்கான முன்னோடியாகச் செயற்பட்டவர் நிதியமைச்சர் மங்கள சமரவீர தான். அவரே தமிழீழ விடுதலைப் புலிகளின் நாடுகடந்த அமைப்பினர் மற்றும் அடிப்படைவாதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஆதரவு அணியை சஜித் பிரேமதாஸவைச் சுற்றி திரட்டியுள்ளார்.


அமைச்சர் றிசாத் பதியுதீனே அந்த அணியில் அடிப்படைவாத செயற்பாட்டாளராக இருப்பதுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் பிரிவினைவாதிகளையும் அடிப்படைவாதிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் பிரிவினராகச் செயற்பட்டு சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

இந்த நிலையில் தான் அமைச்சர் சஜித் பிரேமதாஸ, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு போட்டியாக தேர்தலில் களமிறங்கியுள்ளார்.

இதேவேளை மாமன்னரின் பதவி கிடைத்தாலும் இந்த நாட்டைக் காட்டிக் கொடுக்காத கோத்தபாய ராஜபக்ஷவுக்கு மக்கள் ஆதரவளிக்கத் தீர்மானித்து விட்டார்கள்" என்று பந்துல மேலும் தெரிவித்தார். (இ-7)




## மருத்துவ குணம் நிறைந்த ஒரேஞ்



**பழ வகைகளில் ஒரேஞ் நிறைய மருத்துவக் குணங்களை உள்ளடக்கி உள்ளது.**

**தினமும் ஒரேஞ் சாப்பிட்டு வரலாம். இப்பழத்தில் கல்சியமும் விற்றமின்''சி'' யும் நிறைந்து காணப்படுகின்றன. இவை நம் உடல் திசுக்களைப் புதுப்பிக்கின்றன. மலச்சிக்கல் குணமாகும்.**

**மேலும் ஒரேஞ் பழச்சாறை இரத்தம் உடனடியாக உறிஞ்சிக்கொள்வதால் உடலுக்கு வெப்பமும் சக்தியும் உடனடியாகக் கிடைத்து விடுகின்றன. எனவே நோயாளிகளும் தாய்ப்பால் தர முடியாத தாய்மார்களும் தங்கள் கைக்குழந்தைகளுக்கு 50 முதல் 125 மில்லி வரையும் ஒரேஞ் பழச்சாற்றைக் கொடுத்து வருவது நல்லது.**

**பற்சொத்தையைத் தடுக்கும் ஆற்றலும் ஒரேஞ் இற்கு உண்டு. கல்சியம் நிரம்பப் பெற்றுள்ள ஒரேஞ்சில் நோய்க் கிருமிளை அழிக்கும் திறனும் உள்ளது.**

**மூச்சுக் குழல் தொல்லைகள் உள்ளவர்கள் இரவில் இரண்டு ஒரேஞ்சைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.**

**நெஞ்சு வலி, இருதய நோய்கள், எலும்பு மெலிவு நோய்களையும் இதில் உள்ள உயர்தரமான சுண்ணாம்புச் சத்து குணப்படுத்துகிறது. அடிக்கடி வாந்தி எடுக்கும் கர்ப்பிணிகள் ஒரேஞ் பழச்சாறு சாப்பிட்டு வந்தால் வாந்தி வராது.**

**பாலில் உள்ளதைப் போல் கல்சியம் அதிகமாக இருப்பதால் நரம்புகளை அமைதிப்படுத்தி இரவில் நன்கு தூங்க வைக்கும் அரிய பழம் ஒரேஞ்.**

# பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்கள் பதிலை எதிர்பார்த்து காத்திருப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர்களாக நியமனம் கிடைக்கப்பெற்ற பின்னர் தேர்தல் காரணங்களுக்காக இடைநிறுத்தப்பட்டோர் தமக்கான தீர்வை எதிர்பார்த்து தினமும் யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடி வருகின்றனர்.

கடந்த 25 ஆம் திகதி அன்று யாழ்.மாவட்டச் செயலகம் ஊடாக அமைச்சின் செயலாளருக்கு தாம் அனுப்பி வைத்த கடிதத்துக்கான பதிலை எதிர்பார்த்தே தாம் காத்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

தமக்கு இதுவரை சாதகமான பதில்கள் எவையும் உரிய தரப்பில் இருந்து கிடைக்கவில்லை எனவும் தேர்தல் காரணத்துக்காக மாத்திரமே எமது நியமனம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. தேர்தல் நிறைவடைந்த பின்னர் எவ்வித பிரச்சினையும் இன்றி சேவையில் இணைய முடியும் என்ற நற்செய்தி உத்தரவாதத்துடன் கிடைக்கப்பெற்றால் தேர்தல் நிறைவடையும் வரை தாம் அமைதி காப்போம் எனவும் இதுவரை எமது நியமனம் இடை நிறுத்தப்பட்ட தகவல் அமைச்சின் ஊடாக தமக்கு நேரடியாக வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனம் இடைநிறுத்தப்பட்டதனைக் கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற அதேவேளையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அமைதியான முறையில் இவ் விடயத்தை அணுகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. யாழ். மாவட்டத்தில் பயிலுநர் செயற்றிட்ட உதவியாளர் நியமனம் கிடைத்து பின்னர் இடைநிறுத்தப்பட்டோர் கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியாக தமக்கான நியாயமான தீர்வினை எதிர்பார்த்து மாவட்ட செயலகத்தை நாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# சஜித்துடன் ரணில் இணைந்து செயற்பட்டால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி நிச்சயம்

## மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்–பாலித

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் இணைந்து, புரிந்துணர்வுடன் பயணிப்பார்களாக இருந்தால் சஜித் நிச்சயம் வெற்றி பெறுவார் எனப் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தேவப்பெரும தெரிவித்தார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை பிரதமர் அறிவித்தார். இது சிறந்த தீர்மானம். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த நாட்டில் மறுக்க முடியாத ஒரு தலைவர். அவர் கட்சியின் தலைவர். அவர் பல தடவைகள் இந்நாட்டில் பிரதமராகப் பதவி வகித்தவர்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு சிங்கள, பௌத்த மக்களின் வாக்குகள் மாத்திரமே உள்ளன. இருப்பினும், சஜித் பிரேமதாஸவுக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் அதிகளவில் கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன.

இத்தருணத்தில் ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் பரஸ்பரம் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொண்டு செயற்பட வேண்டும். இவர்கள் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சர்வதேச நிகழ்வுகளை இலங்கையில் நடத்த வெளிநாடுகள் முன்வரவேண்டும் - அரசு

## சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய புதிய திட்டம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் களுக்குப்பின்னர் பின்னடை வைக்கண்ட சுற்றுலாத்துறையை குறுகிய காலத்திற்குள்ளாகவே அரசாங்கம் அதன் துரிதமான நடவடிக்கைகளின் மூலமாக மீட்டெடுத்து முன்னேற்றப்பா தையில் நடைபோடவைத் திருக் கின்றது என்று தெரிவித்த சுற் றுலாத்துறை அபிவிருத்தி வனஜீவராசிகள் மற்றும் கிறிஸ் தவ சமய அலுவல்கள் அமைச் சர் ஜோன் அமரதுங்க சுற்றுலாத் துறை மூலமான வருமானத்தை அதிகரிப்பதற்காக எதிர்காலத்தில் சர்வதேச நிகழ்வுகளை இலங் கையில் நடத்த முன்வருமாறு வெளிநாடுகளிடம் வேண்டு கோள் விடுத்தார்.

சர்வதேச சுற்றுலாத்துறை தினத்தை முன்னிட்டு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் சுற்றுலாத்துறைக்குள் இளம் சமுதாயத்தினருக்கும் சிறந்த வாய்ப்புக்கள் காணப்படுவத னால் அவர்களையும் இத்து றைக்குள் பிரவேசிக்குமாறும் அழைப்பு விடுத்தார்.

சர்வதேச சுற்றுலா தின த்தை முன்னிட்டு உலகளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதன் ஒரு அங்கமாக எமது நாட்டிலும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதனூடாக சுற்றுலாத்துறை தொடர்பில் அனைவரும் அறிந்து கொள் ளக்கூடியதாகவிருக்கும். சுற்று லாத்துறையும் தொழில் வாய்ப் புக்களும் சகலருக்குமான சிறந்த எதிர்காலம் என்னும் இந்த தினத்திற்கான தொனிப்பொரு ளுக்கு ஏற்ப சுற்றுலாத்துறை தொழில் வாய்ப்புக்களை அதிக ரிக்கும் நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டியது அவசிய மானதாகும்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல்களையடுத்து ஹோட்டல்களின் வருவாயில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டது. ஆயி னும் அதனைப் பாடமாகக் கொண்டு பாதுகாப்புப் படையின ரது கடின உழைப்பின் காரண மாக சில மாதங்களுக்குள் நாட் டின் பாதுகாப்பை உறுதிப் படுத் தக்கூடியதாகவிருந்தது. நாடு பூராகவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன. பாதிப்பை ஈடு செய்ய சந்தை வாய்ப்புக் களை அதிகரிப்பதற்கான நடவ டிக்கைகள் துரிதமாக முன்னெ டுக்கப்பட்டன.

அத்தகைய பாதுகாப்பு ஏற்பா டுகளின் விளைவாக ஆறு மாதங்களுக்குள் சுற்றுலாத்துறை உட்பட அனைத்து துறைகளை யும் உறுதிப்படுத்திக்கொள்ளக் கூடியதாகவிருந்தது. இந்த இக் கட்டான நிலையை எதிர் கொண் டமையின் விளைவாக உலக நாடு களில் எமது நாடு எடுத்துக்காட் டாக திகழ்ந்த அதேவேளை சிற ந்த படிப்பினையையும் கொடுத் தது.

எமது நாடு உலக சுற்றுலாத் துறை ஸ்தாபனத்தின் விதி முறைகளுக்கு இணங்க செயற் பட்டு வரும் நாடு என்ற பெருமை யையும் பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சட்டவிரோதமாக மீன்பிடித்த 28 பேர் கடற்படையால் கைது

(ஏறாவூர்)

கிழக்குக் கடலோர பகுதிகளில் கடற்படையினர் நேற்று அதிகாலை முன்னெடுத்த ரோந்து நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 28 பேரை கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 120 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 150 | 130 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 220 | 300 |
| தக்காளி | 140 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 120 | 100 |
| கோவா | 130 | 120 | 120 | 140 |
| கரட் | 100 | 100 | 120 | 120 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 |
| புடோல் | 140 | 120 | 80 | 160 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 140 | 150 | 180 | 240 |
| பாகற்காய் | 350 | 200 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 250 | 150 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 160 | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 120 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 250 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 50 | 100 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 60 | 40 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40 | 20-40 |
| இராசவள்ளி | 300 | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 180 | 200 | 240 |
| முள்ளங்கி | 100 | 100 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 40 | 80 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1844

## அபிராமி

ஒன்றைப் பெறவேண்டும் என்று நினைத்துவிட்டால் இறுதிவரை போராடு. விளைவுகளையோ அதில் ஏற்படும் தோல்விகளையோ கண்டு கவலைப்படாதே



## வனிதா

ஆரம்பத்தில் அளவில்லாமல் பேசிய உறவுகள் தான் இன்று அளவோடு பேசக்கூட விரும்புவதில்லை நம்மிடம்



## ஐஸ்வர்யா

கோபம் துன்பத்தை எளிதாகக் கொண்டு வந்து சேர்த்துவிடும்... உதவி இன்பத்தை எளிதாகக் கொண்டு வந்து சேர்த்துவிடும்



## யாசிகா

மீன்கூட கலரா பிறந்தா மீன் தொட்டியில....
சாதாரணமாகப் பிறந்த கறிச் சட்டியில



## ரித்விகா

கை தவறினால் கண்ணாடிப் பொருள் உடையும் என்று பாதுகாப்பாக இருப்பவர்கள்... வாய் தவறினால் மனம் உடையும் என்று ஏனோ உணர்வதில்லை



## ஜனனி

அனுபவம் பெரும்பாலும் அனைவருக்கும் பொதுவானவை. அதில் எட்டிப் பார்க்கும் நினைவுகள்தான் கொஞ்சம் சுவாரஸ்யமானது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுவர் அரங்கம்

## கவனம் தேவை



அசோக், குமார் இருவரும் ஒரே பள்ளியில்தான் படித்தார்கள். அசோக் படிப்பில் புலி. பள்ளி இறுதித்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று பள்ளியிலேயே முதல் மாணவனாகத் தேறியவன். குமாரும் ஓரளவுக்கு நன்றாகப் படிப்பவன்தான். ஆனால் அசோக் அளவுக்கு இல்லை.

இருவருக்கும் ஒரே கல்லூரியில் இடம் கிடைத்தது. இருவரும் விடுதியில் தங்கிக் கல்லூரிப் படிப்பைத் தொடங்கினர்.

இருவரின் பெற்றோரும் அறிமுகமானவர்கள்தான். குமாரின் அப்பா அசோக்கிடம், "நீதாம்ப்பா என் பையனைப் பாத்துக்கணும்" என்றார்.

கல்லூரியில் சேர்ந்ததும் அசோக்கிடம் சில மாற்றங்கள் ஏற்பட்டன. பெற்றோரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு விடுதி வாழ்க்கை அளித்த சுதந்திரத்தை அனுபவிக்கத் தொடங்கிய உற்சாகத்தில் அசோக் சற்று எல்லை மீறிப் போனான். புதிய நண்பர்களுடன் சேர்ந்து சினிமா, ஊர் சுற்றுதல் என்று ஆரம்பித்த பழக்கம் சிகரெட், மது என்று விரிந்தது.

குமார் அசோக்கைப் பலமுறை எச்சரித்தும் அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. "இதெல்லாம் சின்ன விடயம்டா. இதனால எல்லாம் யாரும் கெட்டுப் போயிட மாட்டாங்க.

இந்த வயசுல இந்த ஜாலி கூட இல்லேன்னா அப்புறம் வாழ்க்கையை அனுபவிக்கவே முடியாது. நீ ஏன் இப்படி சாமியார் மாதிரி இருக்கேன்னு எனக்குப் புரியல!" என்றான்.

விடுமுறையில் ஊருக்கு வந்தபோது குமார் தன் அப்பாவிடம் அசோக்கின் புதிய பழக்கங்கள் பற்றித் தயக்கத்துடன் சொன்னான். அவர் அதிர்ச்சி அடையவில்லை. "இந்த வயசுல இது மாதிரி ஆசைகள் எல்லாம் வரும்.

நாமதான் எது நல்லது எது கெட்டதுன்னு சீர்தூக்கிப் பாத்து நடந்துக்கணும். உனக்கு அந்தப் பக்குவம் இருக்கு. அசோக்குக்கு இல்லாம போச்சே!" என்றார் வருத்தத்துடன். "இது தெரியாம, அசோக் தான் பக்குவமா சிந்திப்பா ன்னு நெனச்சு அவன்கிட்ட உன்னைப் பாத்துக்கச் சொல்லிச் சொன்னேன்!"

"அசோக் அப்பாகிட்ட இதைப்பத்திச் சொல்லப் போறீங்களா அப்பா?"

"சொல்லணும்தான். ஆனா அவருக்கும் எனக்கும் ஓரளவுக்குத்தான் பழக்கம். அவரு தன் பிள்ளை நல்லாப் படிக்கிறதைப் பத்திப் பெருமையோட இருக்காரு. இப்ப நான் போய் இதைச் சொன்னா, பொறாமையால சொல்றேன்னு கூட நெனச்சுக்கலாம். எப்படியும் கொஞ்ச நாள்ள அவங்களுக்குத் தானாத் தெரிய வரும்.

நான் எதுக்கு இப்ப சொல்லி அவங்க சந்தோஷத்தையும் கெடுத்து அவங்களோட நமக்கு இருக்கிற நல்ல உறவையும் கெடுத்துக்கணும்?"

அசோக்கின் பெற்றோருக்கு அசோக்கின் புதிய பழக்கங்கள் பற்றிய விவரம் விரைவிலேயே தெரிய வந்தது. அசோக்கின் அறையில் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதால், உடனே வந்து அவனை விடுதியிலிருந்து அழைத்துச் செல்லும்படி அசோக்கின் அப்பாவுக்குக் கல்லூரி முதல்வரிடமிருந்து போன் வந்தது.

**குறள் 23:**

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்

பெருமை பிறங்கிற்று உலகு.

**பொருள்:**

நல்லது தீயது, இம்மை மறுமை, பிறப்பு வீடு (மோட்சம்) போன்ற இரு வகை நிலைகளை உணர்ந்து (சரியானதைத் தேர்ந்தெடுத்து) அறவழி நடப்பவர்களின் பெருமை இவ்வுலகில் மேலோங்கி இருக்கும்.

## பழமொழிகள்

- மனம் போல வாழ்வு.
- கை காய்த்தால் கமுகு (பாக்கு) காய்க்கும்.
- அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.
- ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.
- விளையும் பயிர் முளையிலே தெரியும்.
- உண்ட உடம்பிற்கு உறுதி, உழுத புலத்தில் நெல்லு.
- ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
- பார்த்தால் பூனை பாய்ந்தால் புலி.
- இனம் இனத்தோடே, வெள்ளாடு தன்னோடே.
- ஒரு காசு பேணின் இரு காசு தேறும்.
- கூலியைக் குறைக்காதே வேலையைக் கெடுக்காதே?
- காற்றில்லாமல் தூசி பறக்குமா?
- ஆறு கடக்கிறவரையில் அண்ணன் தம்பி, ஆறு கடந்தால் நீ யார் நான் யார்?

## விடுகதைகளும் விடைகளும்

- தொப்பொன்று விழுந்தான் தொப்பி கழன்றான் அவன் யார்?

  **பனம்பழம்**
- தட்டச் சீறும் அது என்ன?

  **தீக்குச்சி**
- வயதான பலருக்கு புதிதாக ஒரு கை அது என்ன?

  **வழுக்கை**
- காற்றைக் குடித்து காற்றில் பறப்பான், அவன் யார்?

  **பலூன்**
- அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன?.

  **அம்மி குளவி**
- வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை அது என்ன ?

  **செருப்பு**
- வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி அவர்கள் யார்?

  **பூட்டும் சாவியும்**
- எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன ?

  **மின்விசிறி**
- உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு அது என்ன ?

  **பாய்**

# வடக்கையும் தெற்கையும் இணைக்கும் நோக்கில் வடமராட்சியில் மாணவர் பாராளுமன்ற அமர்வு



(கரணவாய்)

நாட்டில் நல்லிணக்கமும் சக வாழ்வும் என்ற தொனிப்பொருளில் மாணவர்களை சிறந்த பிரஜைகளாக உருவாக்கும் நோக்குடன் மாணவர் பாராளுமன்ற அமர்வு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வட முனையையும் தென் முனையையும் இணைக்கும் நோக்குடன் மாத்தறை கல்வி வலயத்திலிருந்து சுஜாதா வித்தியாலய மாணவர்கள் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரிக்கு வருகை தந்தனர். அவர்கள் 2 பாராளுமன்ற அமர்வுகளை நடத்தினர். இந்நிகழ்வில் சுஜாதா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் விக்னேஸ்வரா கல்லூரி அதிபர் அரவிந்தன் மற்றும் ஆசிரியர்கள்.மாணவர்கள் வடமராட்சி கல்வி வலய மும்மொழி இணைப்பாளர் சாள்ஸ், இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-60)

# கோத்தாவுக்கு எதிராக இரண்டாவது வாக்கு

## அநுரவுக்கு ஆதரவளித்த ஜயம்பதி



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜே.வி.பி. வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு தெரிவித்த, கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்வின் தலைமையிலான ஐக்கிய இடதுசாரி முன்னணி, இரண்டாவது விருப்பு வாக்கை கோத்தபாய ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்று கோரியது.

இதுகுறித்து விளக்கமளித்த கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன,

“அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவளிக்க முடிவு செய்த, ஐக்கிய இடதுசாரி முன்னணி, இரண்டாவது விருப்பு வாக்கை, சர்வாதிகார அச்சுறுத்தலை தோற்கடிப்பதற்காக, கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான பலமான வேட்பாளருக்கு அளிக்க வேண்டும் என கட்சி ஆதரவாளர்களையும் பொதுமக்களையும் கோருவதற்கு முடிவு செய்தது.

அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திலிருந்து விலகும் முடிவு எடுக்கப்படவில்லை. ஆளும்தரப்பு ஆசனத்தில் அமர்வதென்றே கட்சி முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நான் நல்ல உடல் நலத்துடன் உள்ளதால் ஓய்வு பெற வேண்டிய தேவையில்லை

## டிசெம்பரின் பின்னர் மைத்திரி புதிய நடவடிக்கை



(பொலநறுவை)

அரசியலிலிருந்து ஓய்வுபெறப் போவதில்லை என அறிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன டிசெம்பரின் பின்னர் புதிய நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்தார்.

பொலநறுவையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். நான் நல்ல உடல்நலத்துடன் உள்ளதால் ஓய்வு பெறவேண்டிய தேவையில்லை எனக் குறிப்பிட்ட அவர் நாட்டிற்கான திட்டத்தை என்னால் சிறப்பாக முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து நான் அறிவிக்காததால் காணாமல்போய் விடுவேன் என சிலர் எதிர்பார்க்கின்றனர். எனினும் நான் டிசெம்பருக்கு பின்னர் இந்த நாட்டிற்கான மற்றொரு நடவடிக்கையில் ஈடுபடுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து முடிவெடுப்பதை தவிர்க்க வேண்டும்

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை தமிழ் மக்கள் ஏகமனதாக எடுப்பது அவசியம்.

எனினும் அந்த முடிவை எடுப்பதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்று கூடி ஒருமித்த முடிவுக்கு வர வேண்டும்.

இது விடயத்தில் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் தமிழ் மக்கள் பேரவை ஈடுபடும் என்பதான செய்திகள் ஏலவே வெளிவந்திருந்தன.

இவை ஒருபுறமிருக்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவை தமிழரசுக் கட்சி தனித்து எடுக்கக்கூடாது என்பது மிகவும் முக்கியமானது.

கடந்த காலங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எதேச்சையான முடிவுகள் பெரும் பாதிப்பையும் ஏமாற்றத்தையும் தந்துள்ளன.

இந்நிலையில் தொடர்ந்தும் அதே தவறை விடக்கூடாது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற விடயத்தில் எழுத்துமூலமான உத்தரவாதங்கள் எதனையும் தாம் தரமுடியாது என சஜித் பிரேமதாஸவும் கோத்தபாய ராஜபக்ஷவும் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

எழுத்துமூலமான உறுதிமொழிகளைத் தரமுடியாது என்றால், அவர்களின் வாய்மொழி உத்தரவாதங்களைத் தமிழ் மக்கள் எப்படி நம்ப முடியும் என்ற கேள்வி எழும்.

எனவே எழுத்துமூலமான உத்தரவாதத்தைத் தரமுடியாது என்றால், அதற்கான மாற்று ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா என்று ஆராய்வது அவசியம்.

தவிர, எழுத்துமூலமான உத்தரவாதத்தைத் தரமுடியாது என்று கூறுகின்றவர்கள் அந்த முடிவில் இருந்து விலகி; இல்லை நான் எழுத்து மூலமான உத்தரவாதத்தைத் தருகிறேன் என்று கூறும்வகையிலான தந்திரோபாயங்களைக் கையாள வேண்டும்.

அதாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்பது மட்டும்தான் எங்களுக்கு இருக்கக்கூடிய ஒரே தெரிவா? அல்லது ஜனாதிபதித் தேர்தலில் மாற்றுவழி முறைகளைத் தமிழ் மக்கள் பிரயோகிக்க முடியுமா? என்பது பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

இவை தவிர, இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் வெளிநாடுகள் உன்னிப்பான கவனம் செலுத்தியுள்ளன.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யாராக இருக்க வேண்டும் என்பதில் வெளிநாடுகள் மிகுந்த கருசனை செலுத்துகையில், அத்தகைய நாடுகள் தமிழ் மக்களின் ஆதரவு குறித்த வேட்பாளருக்காக இருக்க வேண்டும் எனக் கருதும்.

இத்தகைய வெளிநாடுகளின் நிலைப்பாடு என்ன என்பதை நாடி பிடித்துப் பார்த்து அந்த நாடுகள் ஏதேனும் உறுதிமொழிகளை, உத்தரவாதங்களை மறைமுகமாகவேனும் தர முடியுமா என்பது பற்றியும் ஆராயலாம்.

இதில் எது தமிழ் இனத்துக்குச் சாதகமாக வருகிறதோ அந்தத் தெரிவை எடுப்பதுதான் புத்திசாலித்தனம்.

எனினும் இதனைத் தனித்து ஒரு அரசியல் கட்சியால் மட்டும் செய்ய முடியாது. மாறாக அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றாகக்கூடி தீர ஆராய்ந்து பொருத்தமான முடிவுக்கு வர வேண்டும்.

இதைவிடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி இம்முறையும் தனித்து முடிவெடுத்தால் தமிழர் தலையில் மீண்டும் மண் கொட்டப்படுகிறது என்பதுதான் அர்த்தம்.

# இலங்கைக்குப் பதிலாக இந்தோனேசியா ஐ.நா. அமைதிப்படையில் இணையும்

(கொழும்பு)

லெபனானில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கை இராணுவத்தினர் அடுத்த மாதம் முழுமையாக திருப்பி அனுப்பப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய இராணுவத் தளபதியாக, லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்ட விவகாரமானது சர்வதேச ரீதியாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இறுதிப் போர் இடம்பெற்ற காலத்தில், இலங்கைப் படையணியின் 58 ஆவது பிரிவுக்குத் தலைமை தாங்கிய இவர் மீது பல்வேறு போர்க்குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையில், 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையிடம் வழங்கிய வாக்குறுதியை மீறி, இவரை இராணுவத்தளபதியாக நியமித்ததன் விளைவாக, ஐ.நா. அமைதிப் படையிலிருந்து இலங்கை இராணுவம் வெளியேற்றப்படும் என்று அண்மையில் அறிவிக்கப்பட்டது.

அதற்கிணங்க, லெபனானில் ஐ.நா அமைதிப் படையில் பணியாற்றும் இலங்கை இராணுவத்தினரின் பணிக்காலம் முடிவுக்கு வரவுள்ள நிலையிலேயே, அவர்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கு பதிலாக இந்தோனேசிய இராணுவத்தினரை ஐ.நா. பணியில் அமர்த்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இலங்கை அரசாங்கம், போர்க்குற்ற விவகாரம் குறித்து, தொடர்ச்சியாக இதே நிலைப்பாட்டை கடைப் பிடிக்குமானால், எதிர்காலத்தில் மேலும் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டினர். (இ-7)

## உரமானிய விநியோகம் இன்று ஆரம்பம்

(பூநகரி)

பூநகரிபகுதிகமநலசேவை நிலைய பிரிவுக்குட்பட்ட 20 கமக்கார அமைப்பு விவசாயிளுக்கு திட்டமிடப்பட்ட நேர அட்டவணை அடிப்படையில் காலபோக உர மானிய விநியோகம் இன்று 30 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்டோபர் 23 ஆம் திகதி வரை விநியோகம் நடைபெறவுள்ளது.

குறித்த கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிகள் நெருக்கடியைத் தவிர்க்குமுகமாக தமக்கென குறிக்கப்பட்ட தினத்தில் காலபோக மானிய உரத்தை பெற்றுக் கொள்ளுமாறும்கமநலசேவை நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

அந்தவகையில் இன்று கறுக்காய்த்தீவு, செட்டிய குறிச்சி, ஞானிமடம், 01.10. 2019- கறுக்காய்த்தீவு, செட்டிய குறிச்சி, ஞானி மடம், 02.10. 2019-கறுக்காய்த்தீவு, செட்டியகுறிச்சி, ஞானிமடம், 03.10.2019-கொல்ல குறிச்சி,கௌதாரிமுனை, 04.10. 2019- கொல்ல குறிச்சி, கௌதாரி முனை,05.10. 2019-சிவ பூமி, பிள்ளையார் நகர், பள்ளிக் குடா, செம்மன் குன்று, 07.10.2019-ஆலங்கேணி, மட்டுவில் நாடு கிழக்கு, 08.10.2019-ஆலங்கேணி,மட்டுவில் நாடு கிழக்கு,09.10.2019-நல்லூர், சாமிப்புலம்,முக்கொம்பன், 10.10. 2019-நல்லூர், சாமிப்புலம், முக்கொம்பன், 11.10. 2019-பரமன் கிராய், வாடியடி, மட்டுவில் நாடு மேற்கு, 12.10.2019 பரமன் கிராய், வாடியடி,மட்டுவில்நாடுமேற்கு, 14.10.2019-சின்னப்பல்லவ ராயன்கட்டு,15.10.2019- சின்னப்பல்ல வராயன்கட்டு, 16.10.2019-கறுக்காய்த் தீவு, செட்டியகுறிச்சி, ஞானிமடம், 17.10. 2019-கொல்ல குறிச்சி, கௌதாரிமுனை, 18.10. 2019-சிவபூமி, பிள்ளையார் நகர்,பள்ளிக்குடா, செம்மன் குன்று,19 .10.2019- ஆலங்கேணி,மட்டுவில் நாடு கிழக்கு,21.10.2019-நல்லூர், சாமிப்புலம், முக்கொம்பன், 22.10. 2019-பரமன்கிராய், வாடியடி,மட்டுவில்நாடுமேற்கு, 23. 10. 2019-சின்னப் பல்லவராயன்கட்டு ஆகிய கமக்கார அமைப்புகளுக்கு உரமானியம் விநியோகிக்கப் படவுள்ளது. (9-84)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

பாவத்திற்கு பல கருவிகள் உண்டு. அவற்றுக்கெல்லாம் பொருத்தமான கைப்பிடி பொய் -ஷோர்மன்

## நவராத்திரி பாமாலை

வீரத்திற்கு இன்று இரண்டாம் நாள்



### வீரத்தின் திருவுருவமே

வீரத்தின் திருவுருவமே– உன்னை
விடிந்ததும் கைகூப்பினேன்
மகிசாசூரனை வதைத்தவளே
மனதோடு என்றும் வைப்பேன்

உண்மையில் திருவுருவமே உன்னை
உணர்வுகளால் நான் காண்பேன்
வர்ணங்களின் ஜாலமே உன்னை
வணங்க என் இரு கை போதாது

க.கஜனிகா
கல்வியங்காடு

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வினையும் பயனும்



நம் முன்னோர்கள் நல்லது கெட்டது என்பதைத் தீர்மானித்துச் சிலவற்றைச் செய்யலாம், சிலவற்றைச் செய்யக் கூடாது என்னும் முறையிலே அனுமதி கொடுத்தும், தடைவிதித்தும் வந்துள்ளார்கள். அவைகளெல்லாம் அந்தக் காலத்தை ஒட்டிய வாழ்க்கை முறைக்குப் பொருத்தமாக இருந்திருக்கும். நாம் இன்னும் அதிகமாக, ஆழமாகப் போனால் அந்தக் காலத்தில், "இதைச் செய், அதைச் செய்யாதே" என்று சொல்வதற்கு அவர்கள் எடுத்துக் கொண்டது "சொர்க்கம்", "நரகம்" என்ற இரண்டு கற்பனைகளே. நல்லவை செய்தால் கடவுள் ஒருவனுக்கு நல்ல இடத்தைக் கொடுப்பான் தீயவை செய்தால் தண்டிப்பான் என்று ஆசை காட்டியும், அச்சுறுத்தியும் நல்லன செய்யவும், தீயன தடுக்கவும், வேண்டிய அளவிற்கு மக்களுக்குப் போதித்து வந்தார்கள். விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெற்றுவரும் இந்தக் காலத்திலே அந்த முறை எவ்வளவு நாட்கள் தொடர்ந்து பயன்படும்?

இன்றைக்கு என்ன வேண்டும் என்றால், "ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு" என்ற இயற்கையின் நியதியை (Law of Nature) மனிதன் உணர்ந்து கொள்ளக்கூடிய அளவிற்கு சிறுவயதிலேயிருந்து படிப்படியாக விளக்கி அந்த உணர்வு ஒவ்வொருவருக்கும் வந்து விட வேண்டும். "இதைச் செய்தால் அதன் விளைவு இதுவாகத் தான் இருக்கும், அந்த விளைவைத் தாங்கிக் கொள்வதற்கு நான் தயாரா? என்ற அளவிற்கு ஒவ்வொருவரும் அவர்களுடைய செயலிலே விளைவாகத் தொக்கி நிற்கக் கூடிய ஒரு உண்மையை. இயற்கை அமைப்பை உணர்ந்து கொள்ளக்கூடிய முறையில் உள்ள கல்விதான் இன்றைக்கு அவசியம். செயலிலேயே விளைவு இருக்கின்றது என்பது தெளிவாகவும், உறுதியாகவும் உணர்ந்து கொள்ளப் பெற்றால் ஒரு ஆசை எழும்போது, அதனை நிறைவேற்றிக் கொள்ளச் செயலில் இறங்கும்போது நல்லது அடைவோம் என்று நன்மை செய்வான், தீமை வரும் என்று அஞ்சி அதைத் தடுத்துக் கொள்வான். இந்த முறையிலே தான் தற்காலத்திற்கு கல்வி முறை அவசியம். "வினையும் பயனும்" என்ற முறையிலே ஒரு தெளிவான பொறுப்புணர்ச்சி ஏற்படுவது இன்று எல்லோருக்கும் அவசியம்.

# டயலொக் ஜனாதிபதி தங்கக் கோப்பை கரப்பந்தாட்டம் சம்பியனாகி சாதித்தது தலைமன்னார் வாலிபர் அணி

மன்னார் மாவட்டத்திற்கு உட்பட்ட 23 வயதிற்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் தலைமன்னார் வாலிபர் அணி சம்பியன் கிண்ணத்தை கைப் பற்றினர்.

டயலொக் ஜனாதிபதி தங்க கோப்பை கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டத் தொடர் கடந்த சனிக்கிழமை மன்னார் பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் தலைமன்னார் வாலிபர் அணியை எதிர்த்து சென்மேரிஸ் அணி மோதியது.

5செற்கள் கொண்ட போட்டியில் இரு அணிகளும் அனைத்து செற்களிலும் இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தினர். முதலாவது செற்றில் சென்மேரிஸ் அணி 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆனால் அடுத்த மூன்று செற்களிலும் தலைமன்னார் வாலிபர் அணி நுட்பமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 25:21, 26:24, 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றினர். (க)




# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது முள்ளியவளை வளர்மதி அணி



சிலாவத்தை இளம்பறவை விலளயாட்டுக்கழகம் மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் முள்ளியவளை வளர்மதி அணியை எதிர்த்து செம்மலை உதயசூரியன் B அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் வளர்மதி அணி 04:01 கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.(க)

# மூன்றாம் இடத்தை தனதாக்கியது தமிழ் யுனைட்டட் அணி



வடகிழக்கு பிறீமியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் தமிழ் யுனைட்டட் அணியை எதிர்த்து நொதேன் எலைட் அணி மோதியது.

இவ் ஆட்டத்தின் முதல் பாதி ஆட்டம் எதுவித கோல்களும் பெறப்படாமல் சமநிலையில் நிறைவு பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் தமிழ் யுனைட்டட் அணி ஒரு கோலை பெற்றுக்கொள்ள ஆட்டம் விறுவிறுப்பானது. எனினும் சளைக்காது விளையாடிய நொதேன் எலைட் அணிக்கு ஆட்டத்தின் மேலதிக நேரத்தில் கிடைத்த தண்டனை உதை வாய்ப்பை அவ் அணி கோலாக மாற்ற ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்று சமநிலை வகித்தன.

இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:02 என்ற கோல் கணக்கில் தமிழ் யுனைட்டட் அணி வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது. (க)

## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III

# ஜொலிஸ்ரார் அணி யாழ். மாவட்டத்தில் இறுதிக்கும் மாகாண மட்டத்தில் இரண்டாவது சுற்றிற்கும் தகுதி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடருக்கான அரை இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமையன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஜொலிஸ்ரார் அணி, விக்டோறி அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டதுடன் 2ஆவது சுற்றுக்கும் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. முதலில் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்டோறி அணி 49.2 ஓவர்களில் 180 ஓட்டங்களை பெற்றது. கதியோன் 46,திரேஸன் -14, பிரணவன் 20, ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில்ஜொலி அணியை சார்ந்த பிரசன்னா- 03, ஜனார்த்தனன்-02, வாமணன், பிருந்தன்,கிரிசாந்தன், கிரிசோபன் தலா 01 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 36.3 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களை பெற்றது. சந்தோஸ்-32,சஜீவன்-30, அருண்குமார்-40,ஜனார்த்தனன்-31 ஓட்டங்களை பெற்றனர். பந்துவீச்சில் கதியோன்-02,சரத்குமார்,பிரணவன், டானியல் தலா-01 இலக்கினை கைப் பற்றினர். (க)

# குழந்தை யேசு அணியை வீழ்த்தி வென்றது சென். லூசியா அணி

மன்னார் உதைபந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்படும் எடிசன் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் பள்ளிமுனை சென். லூசியா அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் குழந்தை யேசு அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் லூசியா அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.



சென்.லூசியா அணி சார்பாக றொக்சன், கியூபட் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.(க)

## பிணைமுறி...

மாத்திரம் அல்ல இன்று அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் சஜித் பிரேமதாஸவும் பொறுப்புக் கூற வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன் ஜனநாயகம் என்ற சொற்பதத்தையே நல்லாட்சி அரசாங்கம் மோசடி செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் உள்ள தேசிய கண்காட்சி காட்சிப்படுத்தல் அரங்கில் நேற்று இடம் பெற்ற லங்கா சமசமாஜ கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில் ஆட்சியமைத்த அரசாங்கத்தின் இலட்சணம் மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியுடன் வெளிப்பட்டுள்ளது என்றும் அவர் இதன் போது கூறினார். (ம-3)

## வெடி பொருட்கள்...

ளன.

நேற்று முன்தினம் சுதந்திரபுரம் பகுதியில் தனியார் ஒருவரின் நிலத்தினை உழவு செய்யும்போது கடந்த கால போரின் போது புதைக்கப்பட்ட ஒரு தொகுதி வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு வீட்டின் உரிமையாளரினால் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் குறித்த இடத்தில் அடையாளம் காணப்பட்ட 8 கிளைமோர் குண்டுகளையும் 60 ரிக்னெட்டர்களையும் இனம் கண்டு அடையாளப்படுத்தியுள்ளார்கள்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அதனை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,281)

## மதகுடன் மோது...

பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

பாலமோட்டை பகுதியை சேர்ந்த குறித்த இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் இறம்பைக்குளம் சந்தியிலிருந்து, தனது வீடு நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்.

மாதர் பணிக்கர் மகிழங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் அதிக வேகம் காரணமாக கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகில் இருந்த மதகுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதனால் தூக்கி வீசப்பட்ட இளைஞன் படுகாயமடைந்த நிலையில் அவசர அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட முன்னமே இளைஞர் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விபத்தில் பாலமோட்டை பகுதியை சேர்ந்த சசிகுமார் பிரிந்தன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## பரப்புரைகள்...

னர்.

ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சஜித் பிரேமதாஸ, கூட்டணியைப் பலப்படுத்தி, தமக்கான ஆதரவை உறுதிப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

அதேவேளை, பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தீவிர பரப்புரைப் பேரணிகளை நடத்தவுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் பரப்புரை அநுராதபுரத்தில் வரும் ஒக்ரோபர் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ம-3)

## பொதுச்சின்னத்...

போட்டியிட இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே பொதுஜன பெரமுனவுடன் கூட்டு எனவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கும் நோக்கிற்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் கட்சியின் உறுப்பினர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் எந்தவொரு வேலைத்திட்டத்தையும் முன்னெடுப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரில்லை என ஜனாதிபதி நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குருநாகல் மாவட்ட மாநாட்டின்போது தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலவீனமடைந்திருப்பதாக எவர் கூறினாலும் அதனை ஏற்றுக் கொள்ள முடியா தெனவும், எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியாக ஆட்சிப்பீடத் தில் அமர நினைக் கும் எந்த வேட் பாளராக இருந்தாலும் அவர்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பு அவசியமாகும் எனவும் எதிர்கால ஜனாதிபதியை தீர்மானிக்கும் சக்தி யாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே உள்ளதெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.(ம-3)

## விசாரணை நடத்...

என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்குவின் உடல், நீதிமன்ற உத்தரவை மீறி எரிக்கப்பட்டமை குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"நீதிமன்ற தீர்ப்பினை மீறியவர்கள் முறையாக கையாளப் படுவதுடன் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பினை அமுல் படுத் துவதற் கு மாறாக குறித்த துறவியின் பூதவுடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்வதற்கு துணையாக இருந்து நீதிமன்ற தீர்ப்பினை நிறைவேற்றத் தவறிய பொலிஸாருக்கு எதிராகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்த விவகாரமானது சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டும் அமைப்புகளின் இயலாமையை எடுத்துக் காட்டுவதுடன் நீதிமன்ற தீர்ப்பினை மதிக்காத நீதிமன்ற அவமதிப்பு குற்றம் வரை சென்றுள்ளது. இந்த விடயங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றார். (ம-3)

## அரசி...

தேவை என்றும் தானே அந்த மாற்று என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

நாடு மேலும் பாதுகாக் கப் படுவதை உறுதி செய்ய வேண்டிய அவசியம் உள்ளமையினால் தேர்தலில் போட்டியிடுவதாக முன்னாள் இராணுவத் தளபதி கூறினார்.

இந்த நாட்டினை அரசியல் பாழாகிவிட்டது என சுட்டிக்காட்டிய மகேஷ் சேனநாயக்க நாட்டில் மாற்றத்தைக் கொண்டுவர ஒரு சுதந்திர சக்தி இருக்க வேண்டும் என கூறினார்.(ம-3)

## நெடுந்தீவில்...

கடந்த வெள்ளிக்கிழமை துவிச்சக்கர வண்டியில் வெளியில் சென்ற இவரைக் காணவில்லை என குடும்பத்தினரால் தேடப்பட்டு வந்த நிலையில் கடலில் இருந்து தலையில் பலத்த அடிகாயங்களுடன் குறித்த குடும்பஸ்தரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணையை தீவகம் திடீர் மரண விசாரணை அதிகாரி நாகராசா தியாகராசா மேற்கொண்டார். (ம-3)

## அமைச்சரவைக்...

பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த அமைச்சரவை உப குழு கடந்த வார இறுதியில் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது நியமிக்கப்பட்டது.

இன்றைய தினம் இந்த குழுக்கூட்டத்தின்போது, பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களுடன், தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுமென்று குழுவின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான அசோக்க அபேசிங்ஹ தெரிவித்துள்ளார். (ம-3)

## சர்வாதிகார ஆட்சி...

அத்துடன் குறுகிய காலத்திற்குள் எந்த அரசாங்கத்திலும் நல்லாட்சி அரசாங்கம் வழங்கிய சுதந்திரத்தை வழங்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதை தொடர்ந்து பொதுத்தேர்தலிலும் வெற்றி பெற்று சிறந்த அரசியல் கட்டமைப்பினை ஸ்தாபிக்க வேண்டும். அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பலமான அரசாங்கத்தை கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும் என்றும் அவர் கூறினார்.

சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரிமாளிகையில் இடம் பெற்றது .

அங்கு கருத்துரைக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் தபர அமில தேரர், அமைச்சர் ரவூப் ஹக்கீம்,பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஹெரோயினுடன்...

ருந்த ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போதை தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கமைய நேற்றுமுன்தினம் தேக்கவத்தை பகுதிக்கு சென்ற பொலிஸார் இளைஞர் ஒருவரிடம் சோதனைகளை மேற்கொண்டனர். இதன் போதே அவரிடமிருந்து 520 மில்லிகிராம் ஹெரோயினை கைப்பற்றியிருந்தனர்.

குறித்த சம்பவத்தில் 38 வயதான தேக்கவத்தை பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதுடன் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3,299)

## ஐ.தே.க - கூட்ட...

சந்திப்பொன்று இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ பெயரிடப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெறும் முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பாக இது அமையவுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவளிக்குமாறு கூட்டமைப்பிடம் கோரப்படலாம் என்று அதன் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)


அத கோடிபதி — சீட்டிழுப்பு இல: 746 வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.09.29
விசேட இலக்கம் 1419
வெற்றி இலக்கங்கள் 02 43 51 71 ஆங்கில எழுத்து Z

கொவிசெத — திகதி 2019.09.29 சீட்டிழுப்பு இலக்கம் 2255
I 17 21 23 79

மஹஜன சம்பத — திகதி 2019/09/29 சீட்டிழுப்பு இலக்கம் 4016
V 3 4 6 6 8 2

நீரோகா — திகதி 2019/09/29 சீட்டிழுப்பு இலக்கம் 0604
லக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 07 08 46 54

தன நிதானய — திகதி 2019-09-29 சீட்டிழுப்பு இலக்கம் 207
V 12 17 22 55

கொவிசன் — சீட்டிழுப்பு வாரம் 501 திகதி 29 செப் 2019 வர்ணம் மஞ்சள்
T 01 28 37 46
36028
அடுத்த சுப்பர் ஜக்பொட் 141,770,923/=

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 1049 சீட்டிழுப்பு திகதி 29.09.2019 சிவப்பு
D 07 51 52 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,177,404/=

ராசி அதிர்ஷ்டம் — திகதி 28/09/2019 வெற்றி வாரம் 2631 வர்ணம் இளம்நீலம்
கடகம் 03 11 18 40 ரூ. 3,068,022
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

ராசி அதிர்ஷ்டம் — திகதி 29/09/2019 வெற்றி வாரம் 2632 வர்ணம் ஊதா
விருச்சிகம் 16 30 37 40 ரூ. 3,191,184
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# சஜித் வெற்றி பெற்றாலும் மாற்றம் ஏற்படாது - ஜே.வி.பி

(கொழும்பு)

சஜித் பிரேமதாச வெற்றிபெற்றாலும் ரணில் விக்ரமசிங்கவே பிரதமராக இருக்கப்போகின்றார். அதனால் இந்த அரசாங்கத்தில் எந்த மாற்றமும் இடம்பெறப் போவதில்லை. அவ்வாறு இல்லை என்றால் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக்க மாட்டேன் என சஜித் பகிரங்கமாக தெரிவிக்கவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்டுள்ளதன்மூலம் அவர் வெற்றிபெற்றால் மாற்றங்கள் ஏற்படும் என மக்களின் எதிர்பார்ப்பு தொடர்பாக தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
(C-7539)
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதனார்மடம் ● திருகோணமலை
0768226240
V2 TRAVELS

CTHI



ஆரம்பம்
Oct 5 & 8 2019
Special Offer
30,000/=
ஹோட்டல் மனேஜ்மென்ட்
100% வேலை
90% செய்முறை வகுப்புக்கள்
படிக்கும் போதே கைநிறைய சம்பாதிக்க வெளிநாட்டில் உயர் கல்வி
No.1544, KKS Road, Jaffna.
0760579999, 0213146171
(C-7747)

விற்பனைக்கு
பாவனையில் உள்ள தேங்காய் எண்ணெய் அரைக்கும் இயந்திரம் - 1
நல்லெண்ணெய் அரைக்கும் இயந்திரம்- 1
077 841 1969 (462)

மணமகள் தேவை
90, ஆயிலியம் 7 செவ்வாய் Doctor, 77, ரேவதி ஆசிரியர், 74, கேட்டை லண்டன் சிற்றிசன். மணமன்களிற்கு மணமகள் தேவை.
துர்க்கா திருமண சேவை
077 818 5978, 075 011 1122 (469)

சிங்கள
கற்கைநெறிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
• பாடசாலை மாணவர்களுக்கான தனிப்பட்ட வகுப்புக்கள்
• உத்தியோகஸ்தர்களுக்கான மாலை /இரவு நேர வகுப்புக்கள்
• உயர்தரப்பரீட்சை எழுதியவர்களுக்கான வகுப்புக்கள்
Sinhala Medium இல் கற்ற பட்டதாரி ஆசிரியரால் வகுப்புக்கள் அனைத்து கிளைகளிலும் நடாத்தப்படுகிறது.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 02-10-2019
DMI COMPUTER EDUCATION
HOTLINE 0777 17 35 17
TVEC Reg.No.:P25/0066
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403
நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | சிரணிச்சந்தி சண்டிலிப்பாய் 021 225 6665 | கிளிநொச்சி 021 228 5555

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (466)

ஆங்கிலம்
3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி
இம்முறை A/L எழுதிய மாணவர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளுக்கான புதியபிரிவுகள் ஆரம்பம்
3மாத சனி, ஞாயிறு பிரிவுகள் - 05.10.2019
1. காலை : 08-10 3.மதியம் : 01-03
2. காலை : 10-12 4.மாலை : 03-05
அனுமதி, புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்
அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் மூன்றே மாதங்களில் சரளமாக பேசும் வகையில் 20 வருடகால ஆய்வில் உருவாக்கப்பட்ட ஆங்கில பயிற்சிநெறி
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்,
021 222 4282
077 621 4567
(C-7746)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-7729)



இனுவில் திருப்பதி அருள்மிகு
திருவேங்கடேஸ்வரர் ஆலயம், மருதனார்மடம்

## வருடாந்த பிரமோற்சவ தினம் - 2019

30.09.2019 முதல் 09.10.2019 வரை

- முகூர்த்தக்கால் ஆவணி 27ஆம் நாள் (13.09.2019) வெள்ளிக்கிழமை காலை 6.15
- பிரமோற்சவத்திற்கான பூர்வாங்க கிரியைகள் அங்குரார்ப்பணம் புரட்டாதி 12ஆம் நாள் (29.09.2019) மாலை 6.00 மணி
- கொடியேற்ற தினம் புரட்டாதி 13ஆம் நாள் (30.09.2019) திங்கட்கிழமை
- இரதோற்சவ தினம் புரட்டாதி 20ஆம் நாள் (07.10.2019) திங்கட்கிழமை
- தீர்த்தோற்சவ தினம் புரட்டாதி 21ஆம் நாள் (08.10.2019) செவ்வாய்க்கிழமை
- திருக்கல்யாணம் புரட்டாதி 22ஆம் நாள் (09.10.2019) புதன்கிழமை

**கோவிந்தன் அடியார்களே !**

வேண்டியவர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்பதற்காக இணுவைத்திருப்பதியிலே திருமால் வடிவமும் ஈஸ்வரவடிவமும் இணைந்து திருவேங்கடஈஸ்வரராக அருள் பாலித்துக் கொண்டிருக்கும் திருப்பதியானின் பிரம்மோற்சவம் 30.09.2019 திங்கள் முதல் 09.10.2019 புதன்கிழமை வரை நடைபெற தெய்வத்திருவருள் கூடியுள்ளது. தினமும் அதிகாலை 5.00 மணிக்கு மஹா அபிஷேகம் ஆரம்பமாகி காலை 7.30 மணிக்கு விசேட அலங்கார பூஜையும் மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் மாலை 6.30 மணிக்கு எம்பெருமான் திருவூஞ்சலில் ஆரோகணித்திருக்க இசை, நாட்டிய சமர்ப்பணங்கள் நடைபெறும். தொடர்ந்து 7.30 மணிக்கு அன்னதானம்.

### நிகழ்ச்சி நிரல் விபரம்

| திகதி | திருக்கோலம் | இசை ஆராதனை |
|---|---|---|
| 30.09.2019 திங்கட்கிழமை | பரமபதநாதர் திருக்கோலம் | நாட்டியாஞ்சலி : திருமதி துஸ்யந்தி சுகுணன்நெறியாள்கையில், நாட்டிய கலாகேந்திரா மாணவர்கள் வழங்கும் நாட்டியாஞ்சலி |
| 01.10.2019 செவ்வாய்க்கிழமை | நாராயணன் திருக்கோலம் | பாட்டு : திரு.பொன்.ஸ்ரீவாமதேவன், வயலின் : கா.குகபரன், மிருதங்கம் : திரு.அ.அமிர்தலோஜனன், கெஞ்சிரா : திரு.நா.சிவசுந்தரசர்மா, கடம் : திரு.தி.அரண்ராஜ் |
| 02.10.2019 புதன்கிழமை | மோகினி அவதார திருக்கோலம் | பாட்டு : அ.அமிர்தலோஜனன், திரு.அ.அமிர்தசிந்துஜன், வயலின் : திரு.கா.குகபரன், மிருதங்கம் : திரு.ந.சிவசுந்தரசர்மா, கெஞ்சிரா : திரு.ப.சாரங்கன், கடம் : கு.ரவிசங்கர், முகர்சிங் : திரு.சி.செந்தூரன் |
| 03.10.2019 வியாழக்கிமை | வாமனர் திருக்கோலம் | பாட்டு : திரு.ந.பரந்தாமன், வயலின் : திரு.கே.வேலதீபன், மிருதங்கம் : திரு.நா.சிவசுந்தரசர்மா, கெஞ்சிரா : திரு.பா.ஞானவேல், கடம் : திரு.ச.பிரணவன் |
| 04.10.2019 வெள்ளிக்கிழமை | நவநீதகிருஷ்ண திருக்கோலம் | வயலின் சோலோ - வயலின் : திரு.சோ.கோபிதாஸ், மிருதங்கம் : சு.கமலதாஸ் கடம் : கு.ரவிசங்கர், மோர்சிங் : திரு.எஸ்.செந்தூரன், தபேலா : பா.கபிலன் |
| 05.10.2019 சனிக்கிழமை | வீணாகான சரஸ்வதி திருக்கோலம் | ஷாகித்திய வீணாலயா வழங்கும் விரலிசை நாதம் (வீணாகான சமர்ப்பணம்) நெறியாள்கை : திருமதி விதுஷா கோபிகிருஷ்ணன் |
| 06.10.2019 ஞாயிற்றுக்கிழமை | கிருஷ்ண திருக்கோலம் | பாட்டு : திரு.மு.துஸ்யந்தன், வயலின் : திரு.க.குகபரன், மிருதங்கம் : திரு.கு.ரவிசங்கர் கடம் : திரு.க.தேசிகன். முகர்சிங் : திரு.சி.செந்தூரன் |
| 07.10.2019 திங்கட்கிழமை | மகாவிஷ்ணு திருக்கோலம் இரதோற்சவதினம் | பாட்டு : ஸ்ரீமதுராங்கி, வயலின் : திரு.கே.வேலதீபன், மிருதங்கம் : திரு.கே.பிரணவன் கெஞ்சிரா : திரு.ப.சாரங்கன், கடம் : க.தேசிகன் |
| 08.09.2019 செவ்வாய்க்கிழமை | மகாவிஷ்ணு திருக்கோலம் தீர்த்தோற்சவதினம் | பாட்டு, திரு.க.ரஜீவன், வயலின் : திரு.ப.சியாம்கிருஸ்ணா மிருதங்கம் : திரு.சி.செந்தூரன், கெஞ்சிரா பா.ஞானவேல், கடம் : ச.பிரணவன் |
| 09.10.2019 புதன்கிமை | திருக்கல்யாண்ம் | நாட்டிய சமர்ப்பணம் : திருநெறிய தமிழ்மறைக்கழக மாணவர்கள் வழங்கும் சமர்ப்பணம் |

021 224 2300 / 077 725 2476 (C-7731) ஆலய தர்மகர்த்தா - ச.கனேசலிங்கம்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.